வானவில்
VAANAVIL
இதழ் 151 | ஆடி 2023
ISSUE 151 | JULY 2023

# 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்!




**இ**லங்கையின் இனப்பிரச்சினை சீழ் பிடித்து அழுகி நாற்றமெடுக்கும் புண்ணாக மாறி வெகுகாலமாகிவிட்டது. அதைக் குணப்படுத்துவதற்கு காலத்துக்காலம் பல சிகிச்சைகள் பரிந்துரைக்கப்பட்டும் அவை எதுவுமே நடைமுறைக்கு வந்து பலனளிக்கவில்லை.

இத்தகைய சூழ்நிலையில்தான் அரசியல் பிரச்சினையாக இருந்த இனப்பிரச்சினை யுத்தமாக மாறியது. அதை யுத்தமாக மாற்றியவர்கள் யார்? அவர்களது நோக்கம் என்பன குறித்து திரும்பவும் திரும்பவும் விவாதித்துக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை.

இனப்பிரச்சினை யுத்தமாக மாறியதில் இலங்கையிலுள்ள சக்திகளை விட இந்தியாவுக்கும் ஒரு பங்கு இருக்கின்றது. இனப் பிரச்சினை தீவிரமடைந்த அந்தக் காலகட்டம் அமெரிக்க – சோவியத் பனிப்போர் நிலவிய காலகட்டமாகும். இலங்கையில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு அமெரிக்க சார்பாகவும், இந்தியாவில் இருந்த இந்திராகாந்தி அரசு சோவியத் சார்பாகவும் இருந்ததால், இலங்கையின் இனப்பிரச்சினை பிராந்திய – சர்வதேசிய குணாம்சத்தை எட்டிப் பிடித்தது.

இலங்கை அரசின் அமெரிக்க சார்புப் போக்கும், தமிழர் விரோதப் போக்கும், இலங்கைக்கு மிக அருகில் இருந்த இந்தியாவின் தேசிய மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என இந்தியா கருதியது. எனவே இலங்கை அரசை அடக்கி அடிபணிய வைப்பதற்காக இந்தியா இலங்கைத் தமிழ் போராளி இயக்கங்களுக்கு அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் ஆதரவு கொடுக்கும் ஒரு நிலையை எடுத்தது.

அத்தகைய ஒரு நிலையை எடுத்ததன் மூலம் இந்திய அரசு இலங்கை அரசை தான் நினைத்தவாறு அடிபணிய வைத்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியத் தலையீட்டுக்கான அத்திபாரத்தை இட்ட இந்திராகாந்தி சீக்கியத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுவிட்ட நிலையிலும் அவரது மகன் ராஜீவ் காந்தி அரசு தனது தயாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இலங்கையின் ஜெயவர்த்தன அரசை ஒரு வழிக்குக் கொண்டு வந்தது. அதன் அடிப்படையில் உருவானதுதான் 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை.

இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கை அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் மூலம் இலங்கையின் 9 மாகாணங்களுக்கும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. இவை ஒரு வகையில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு அதிகாரப் பகிர்வு வழங்குபவையாகவும், அதேநேரத்தில் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வாழ்கின்ற மக்களுக்கும் அதிகாரப் பகிர்வு வழங்குபவையாகவும் அமைந்தன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களது உரிமைகளுக்கான போராட்டத்தில் இது ஒரு மைல்கல் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு காலத்துக்காலம் பல்வேறு தீர்வுகள் பரிந்துரைக்கப்பட்டாலும், 13 ஆவது திருத்தம் மட்டுமே இலங்கை அரச தரப்பாலும் ஏற்கப்பட்டு, அரசியல் அமைப்பிலும் இடம் பெற்ற ஒன்று. ஆனால், தமிழ் அரசியல் தலைமைகளின் வழமையான எதிர்மறையான நிலைப்பாட்டால் இந்தத் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத சூழலே இன்றுவரை நிலவுகின்றது. தமிழ்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# இனவாதமும் இனவன்செயல்களும்

இலங்கையின் வரலாற்றில் பாரியதொரு இனவன்செயல்கள் இடம்பெற்று 40 வருடங்கள் கடந்து விட்டன. இந்த வன்செயலின் போது இலங்கையின் தலைநகரமான கொழும்பு நகரமே அதிகம் பாதிக்கப்பட்டது. கொழும்பிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழர்களின் வீடுகள், கடைகள் தொழில் நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. கொழும்பை வதிவிடமாகக் கொண்டிருந்த தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டு, பலர் வீதிகளில் வைத்து டயர் போட்டு எரிக்கப்பட்டார்கள்.

கொழும்பு நகரைத் தொடர்ந்து, இலங்கையின் ஏனைய பாகங்களிலும் தமிழர்களுக்கு எதிரான இனவன்செயல்கள் தீவிரமாகப் பரவியது. குறிப்பாக கிழக்கில் திரிகோணமலையிலும் மத்தியபகுதியிலுள்ள மலைநாட்டு நகரங்களிலும் தமிழர்களது பல வீடுகள், கடைகள் மற்றும் வியாபார நிலையங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டு, பலர் கொல்லப்பட்டனர்.

இனவன்செயல்கள் நாடு தழுவி இடம்பெறலாம். ஆனால் பாதுகாப்பான சிறையினுள்ளும் கொலைகளைப் புரிவது என்பது நாட்டிலுள்ள அரசினதும் பாதுகாப்புப்படையினரதும் ஆதரவின்றி சாத்தியமில்லை. கொழும்பு – வெலிக்கடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்ட (ஜூலை 25ஆம் திகதி 35 கைதிகளும் ஜூலை 28ஆம் திகதி 18 கைதிகளும்) 53 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் 1983 ஆம் ஆண்டு 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் வைத்து 13 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே, மறுநாள் 24ஆம் திகதியிலிருந்து கொழும்பில் தமிழர்கள் மீதான வன்செயல்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவே, கடந்த 40 வருடங்களாக சொல்லப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றன. ஆனால் இந்த மாதிரியான ஓர் இனத்தின் மீதான பாரிய வன்செயல்கள், ஒரு சம்பவத்தை காரணங்காட்டி திடீரென நடைபெற வாய்ப்பில்லை. ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்டு, இனங்களிடையே பதட்டமான சூழ்நிலையைப் பேணினால் மாத்திரமே, இனவாதிகள் தங்களுக்கு சாதகமான சூழலில் இனவன்செயல்களைப் புரியலாம்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் பெரு வெற்றியீட்டிய ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி, 1978 ஆம் ஆண்டு கொண்டு வந்த புதிய அரசியமைப்பு மூலம் இலங்கையில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டு, ஜே.ஆரே முதலாவது நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியானார். 1983 இல் அவரே ஜனாதிபதியாக இருந்தார். ஐதேகவைச் சேர்ந்த தற்போதைய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1983 இல் கல்வி அமைச்சராக பதவி வகித்தவர்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே பௌத்த – சிங்கள இனவாதத்தை இலங்கையில் நிறுவனமயப்படுத்தவதில் ஐதேகவும் ஜேஆரும் குறியாக இருந்தனர். 1977 இல் பதவிக்கு வந்ததலிருந்து அதனைத் தீவிரப்படுத்தினார்கள். சிறுபான்மை தமிழ் – முஸ்லீம் மக்களுக்கு எதிராக பெரும்பான்மை சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதன் மூலம், பெரும்பான்மையினத்தை தங்கள் வசப்படுத்தி, தொடர்ந்து ஆட்சியதிகாரத்தில் நீடிப்பதுதான் அவர்களது திட்டம். இந்தியாவில் பாரதிய ஜனதாக்கட்சியும் நரேந்திர மோடியும் இந்த செயல்முறையே பின்பற்றுகிறார்கள். இன்று மணிப்பூர் கொழுந்து விட்டு எரிவதற்கு பாஜக – மோடியின் இந்துத்துவ சித்தாந்தமே அடிப்படைக்காரணம் என்பது தெரிந்ததே.

பிரித்தானியா ஏகாதிபத்தியத்திடமிருந்து 75 வருடங்களுக்கு முன்னதாக இலங்கை சுதந்திரத்தை பெற்றுக்கொண்டது. அப்போது இனங்களுக்கிடையேயான முரண்பாடு கூர்மையடைந்து இருக்கவில்லை என்றே கூறப்படுகின்றது. சுதந்திரத்திற்கு பின்னர் கிடைத்த ஜனநாயகத்தை பயன்படுத்திக் கொண்டு தங்கள் சொந்த அரசியல் இலாபங்களுக்காகவே எல்லா தரப்பினராலும் இனவாதம் ஊட்டி வளர்க்கப்பட்டது. அத்தோடு தமிழர் தரப்பில் கூறப்படுவதுபோல் சிங்கள – பௌத்த இனவாதம் மாத்திரந்தான் நடந்து முடிந்த இனவன்செயல்களுக்கும் போருக்கும் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. 'ஆண்ட தமிழினம் மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் தவறென்ன?' என்ற வரிகளை பல தசாப்தங்களாகவே நாங்கள் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம்.

1983 ஆண்டு இனவன்செயல்களை கறுப்பு ஜூலை என வர்ணித்து வருடாவருடம் பலர் கொண்டாடி வருகிறார்கள். பல தமிழ் ஊடகங்களும் இதற்கு முக்கியத்துவம் வழங்கி செய்திகளை வெளியிடுகிறார்கள். 1983 ஜூலைக் கலவரத்தை நினைவு கொள்பவர்களில் அநேகர், 1987 இல் யாழில் நடைபெற்ற கந்தன் கருணைப் படுகொலையோ அல்லது 1990 இல் வடபகுதியிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதையோ நினைவு கொள்வதில்லை. ஏன், 2004 இல் இலங்கை கரையோரப்பகுதி மக்களைப் பல ஆயிரக்கணக்கில் பலி கொண்ட சுனாமியைக்கூட வருடாவருடம் இவர்களில் அநேகர் கடந்துதான் செல்கிறார்கள்.

1983 ஜூலையை அதிகமாகத் தூக்கிப்பிடிப்பவர்கள் தமிழ் தேசியவாதிகளே. இவர்கள் எப்போதுமே பாதிக்கப்பட்ட மக்களை வைத்தே இன அரசியல் செய்கிறார்கள். அத்துடன் இதுவரையில் 1983 இல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இவர்கள் கடந்த 40 வருடங்களாக எந்த முயற்சியும் எடுக்காது, வன்செயல் சூத்திரதாரிகளுடன் கள்ள கூட்டும் வைத்திருக்கிறார்கள். மேலும், ஐக்கிய தேசியக்கட்சியினர் தமது ஆட்சியில் 1983 ஜூலையில் நடந்த வன்செயலில் சம்பந்தப்பட்ட தமது கட்சி அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளரகளுக்கு எதிராக உள்ளக விசாரணைகளை நடத்தி, அவர்களை சட்டத்தின் முன்னே நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் அதனையும் அவர்கள் இதுவரையில் செய்யவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனவன்செயல்களைப் போலவே, சிங்கள, முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும் இனவன்செயல்கள் இடம் பெற்றுள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது. மக்கள் அழிவுகளை நினைவு கூர்வதில் தவறேதும் கிடையாது. ஆனால் இந்த நினைவு கூர்தல் என்பது அவரவர் அரசியல் கோட்பாடுகளுக்கு இசைவானதாக, குறிப்பிட்ட இனக்குழுமத்திற்கு சார்பானதாக மாத்திரம் இருக்கக்கூடாது.

இலங்கையில் தற்போது வாழும் சகல இனமக்களும், புலம்பெயர்ந்த மக்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இனவாதத்தாலும் இனவன்செயல்களாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு, பகிரங்கமாக இனவாதம் பேசுபவர்கள், இனவாதத்தை தூண்டுபவர்கள் மற்றும் இனவன்செயல்களை புரிபவர்களுக்கு எதிராக கடுந்தண்டனைகள் வழங்கும் சட்டமூலங்களை இலங்கை இனப்பிரச்சனைக்கான நிரந்தர அரசியல் தீர்வில் இணைக்க ஆவனசெய்ய வேண்டும்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

வானவில்

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# மணிப்பூரில் நடக்கும் கொடூரங்கள்



கடந்த இரண்டரை மாதங்களாக மணிப்பூரில் உள்ள மெய்தேய் (Meitei) மற்றும் குகி (Kuki) சமூகத்தினருக்கு இடையே வன்முறை மோதல்கள் நிலவி வரும் நிலையில், குகி பழங்குடியினத்தை சேர்ந்த இரண்டு பெண்களை மெய்தேய் சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கும்பல் ஒன்று சேர்ந்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்து சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் ஜூன் 19ந திகதி புதன்கிழமை பகிரப்பட்டு உலகளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த இரண்டு பெண்களில் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாகியுள்ளார். இது தொடர்பாக பல்வேறு தரப்பினர் தங்கள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்தியாவை மாத்திரமல்ல, உலகத்தையே உலுக்கிய இந்தச் சம்பவம் கடந்த மே மாதம் 4ந திகதி மணிப்பூரின் காங்போக்பி (Kangpokpi) மாவட்டத்தில் உள்ள பைனோம் (Phainom) கிராமத்தில் நிகழ்ந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக மே 18ந் திகதி அன்று காங்போக்பி பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அந்த வீடியோ வெளியான பிறகுதான் அச்சம்பவமும், அதன் பின்புலமும் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அன்றைய தினம் தங்கள் கிராமத்தை வன்முறையாளர்கள் சூறையாடியபோது, அதிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளும் வகையில் பெண்கள் சிலர் தப்பியுள்ளனர். அதில் 3 பேர் வன்முறையாளர்கள் வசம் சிக்கியுள்ளனர். அவர்கள் மூவரின் ஆடைகளையும் கலைத்து, ஊர்வலமாக அழைத்து சென்றுள்ளனர் வன்முறையாளர்கள். தற்போது வெளியாகி உள்ள இந்த வீடியோவில் இரண்டு பெண்கள் மட்டும்தான் காணப்படுகின்றனர்.

மனிதத்துவம் மரித்துப்போன இந்தக் கொடூரச் சம்பவம், இந்திய தேசிய அளவில் பல தரப்பினரையும் கொதிப்படையச் செய்துள்ளது. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், மாநில முதல்வர்கள், அமைச்சர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் இதற்கு தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

---

## *மணிப்பூர் பிரச்சினையின் பின்னணி என்ன?*

**-கே.வி.மதுசூதனன்**

மணிப்பூர் மாநிலத்தின் மலைகளிலும் பள்ளத்தாக்கிலும் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட வெவ்வேறு சமூகங்கள் வாழ்வதால் அங்கு கலவரங்களும் மோதல்களும்தான் வரலாறு. இம்பால் பள்ளத்தாக்கிலும் மலைகளிலும் வாழும் சமூகங்களுக்கு இடையே சமீப காலமாகவே பரஸ்பர அவநம்பிக்கையும் சந்தேகங்களும் வலுத்து வந்தது. அதிலும் குறிப்பாக மெய்தேய் – குகி இரு சமூகங்களுக்கும் இடையே பகைமை கொழுந்துவிட்டு எரிகிறது.

'மெய்தேய்களுக்கு பழங்குடி இன (Scheduled Tribes - ST) அந்தஸ்து வழங்குவது குறித்து மணிப்பூர் அரசு பரிசீலிக்க வேண்டும்' என்று மணிப்பூர் உயர் நீதிமன்றம் மார்ச் 27இல் ஆணை பிறப்பித்த பிறகு பிரச்சினை தீப்பற்றியது.

### பாரதிய ஜனதாக்கட்சி அரசின் நகர்வு

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு முன்னதாக, பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியிலிருந்து வனப் பழங்குடியினரை வெளியேற்றும் நடவடிக்கையை மாநில அரசு எடுத்தது. இதைத் தங்களுக்கு எதிரான அரசின் திட்டமிட்ட நடவடிக்கை என்று பழங்குடிகள் அதிலும் குகி இன மக்கள் குற்றஞ்சாட்டினர். பல ஆயிரம் குகி இன மக்களை அவர்களுடைய வீடுகளிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றிய அரசு அவர்கள் வாழ்வதற்கான மாற்று இடத்தைத் தயார் செய்யவே இல்லை. குகி சமூகத்தவர் சார்பில் சட்டப்பேரவையில் 10 பேர் இடம்பெற்றிருந்தார்கள். அவர்கள் பாரதிய ஜனதாக்கட்சித் தலைமையிலான அரசில், 'குகி மக்கள் கூட்டணி' என்ற பெயரில் பங்கு வகித்தும் இந்த நிலைமை ஏற்பட்டது.

### மோதல்களின் பின்னணி

இந்த மோதல்களுக்கும் பதற்றத்துக்கும் காரணமான வெவ்வேறு சமூகக் குழுக்களுக்கு இடையிலான சமூக இயக்கவியலை நாம் புரிந்துகொள்வது முக்கியம். குகிகள், மெய்தேய்கள் இரு தரப்பினரும் மணிப்பூரின் முக்கியமான இனக் குழுக்கள்.

மணிப்பூரின் மொத்த மக்கள்தொகையில் 53 வீதமானோர் மெய்தேய்கள். இவர்கள் பெரும்பான்மையாக மலைக்குக் கீழே பள்ளத்தாக்கில் வாழ்பவர்கள். மாநிலத்தின் 10 வீதமான நிலப்பரப்பில் இவர்கள் இருக்கிறார்கள். மாறாக, குகிகள் பெரும்பான்மையாக மலைப் பகுதியில் வசிக்கிறார்கள் இவர்களை அடுத்த எண்ணிக்கையில் வாழ்பவர்கள் நாகாக்கள். இந்த இரு தரப்பினரும் சிறுபான்மையினர் என்றாலும், மலைப் பகுதியில் 90 வீதமான நிலப்பரப்பில் இவர்கள் பரவி வாழ்கிறார்கள்.

எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்பதோடு, அரசியல் பலமும் மிக்கவர்கள் மெய்தேய்கள்.

ஆட்சியதிகாரத்திலும், அரசு இயந்திரத்திலும் மெய்தேய்களுடைய பலம் மணிப்பூரில் அதிகம். மெய்தேய்களும் பழங்குடியின மரபில் வந்தவர்கள் என்றாலும், தங்களை வைணவர்களாகவும், இந்துக்களாகவும் கருதுபவர்கள். பழங்குடியினப் பட்டியலில் இவர்கள் இடம்பெறவில்லை. ஆகையால், இந்து மதத்தைப் பின்பற்றுவதால் இவர்களுக்குப் பொருளாதார, அரசியல் பயன்கள் கிடைப்பதில்லை என்ற கருத்து அவர்களிடையே வலுத்து வருகிறது.

**மெய்தேய்களின் முன்கதை**

மெய்தேய்கள் இந்திய அடையாளத்துடனும் இந்து மத அடையாளத்துடன் பிணைத்துக் கொண்டதானது எல்லாம் பின்கதை. உண்மையில் மெய்தேய்கள் மங்கோலிய இனத்தவர்கள். சீனா, பர்மா, இந்தியா ஆகிய நாடுகளிலும், இந்தியாவின் சில வடகிழக்கு மாநிலங்களிலும் வாழும் மங்கோலிய இனத்தவரின் ஒரு பகுதியாகவே தங்களை மெய்தேய்கள் நீண்ட காலமாகப் பார்த்து வந்தனர். மெய்தேய்கள் – பிற பழங்குடிகள் இடையேயான மோதல் நீண்ட காலமாக நீடித்து வருகிறது.

முன்னதாக, பல பகுதிகளிலும் வாழும் மங்கோலிய சமூகங்களைச் சேர்த்து, ஒரே கூட்டமைப்பாகச் செயல்படும் கனவில் மெய்தேகளும் இருந்தனர். அந்த வகையில், வடகிழக்கில் பரவிய வங்க மொழியையும் கலாச்சாரத்தையும் அவர்கள் எதிர்த்தனர். வங்கதேசத்திலும் பர்மாவிலும் (மியான்மர்) தளங்களை அமைத்துக் கொண்டு மக்கள் விடுதலை இராணுவம் (People's Liberation Army - PLA) என்ற பெயரில் இந்திய பாதுகாப்புப் படைகளுடன் ஒருகாலத்தில் மோதலில் ஈடுபட்டனர். மணிப்பூரில் 'மற்றவர்கள்' இருக்கக் கூடாது என்றும் பேசினர். மணிப்பூர் முஸ்லிம்களை 'பங்கால்' (Pangal) என்று குறிப்பிட்டனர். இந்த மோதலின் எதிர்வினையாக பங்கால்கள் 'வடகிழக்கு சிறுபான்மை முன்னணி' என்ற ஆயுதக் குழுவை உருவாக்கி மோதல்களில் ஈடுபட்டனர்.

பிற்காலத்தில், வடகிழக்கு மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வுகளாலும், இந்திய இராணுவம் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும், சமாதானப் பேச்சுகளாலும் ஓரளவுக்கு அமைதிச் சூழல் திரும்பியது. இதன் ஒரு பகுதியாக இந்திய அடையாளத்துடனும், இந்து அடையாளத்துடனும் மெய்தேய்கள் இணையலாயினர். ஆயினும், ஏனைய இனக் குழுக்களுடனான அவர்களுடைய பகைமை நீடித்தது. இந்தப் பகைமையே இப்போது மீண்டும் கொழுந்துவிட்டு எரிகிறது.

**மீண்டும் இராணுவம்**

இரு சமூகத்தவருக்கிடையே பரஸ்பர சந்தேகம் அதிகமாகிவிட்டதாலும், இருதரப்புமே ஏகே 47 உள்ளிட்ட நவீன ரக ஆயுதங்களைக் கொண்டிருப்பதாலும், மணிப்பூர் இப்போது கலவர நிலமாகக் காட்சியளிக்கிறது. இந்திய இராணுவம், மத்திய ஆயுதக் காவல் படை, எல்லை பாதுகாப்புப் படை மற்றும் விமானப்படை ஆகியன இப்போது பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மணிப்பூர் வந்து இருதரப்பு தலைவர்களையும் சந்தித்துச் சென்றார். சி.ஆர்.பி.எஃப்பில் (Central Reserve Police Force - CPRF) மூத்த அதிகாரியாக முன்னர் வட கிழக்கில் பணியாற்றியவர் மணிப்பூர் அரசுக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆயினும், மோசமான சூழலே நிலவுகிறது.

மிகக் குறுகிய காலத்துக்குள் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் நாசமாக்கப்பட்டதும் பெரிய இழப்புகளாகும். சமரச முயற்சிகளை இராணுவத் தலைமைத் தளபதி, உள்துறை அமைச்சர் போன்றோர் மேற்கொண்டாலும் '40 குகி பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்றோம்' என்று மணிப்பூர் முதல்வர் அறிவித்தது, அந்த சமரச முயற்சிகளையெல்லாம் நீர்த்துப்போகச் செய்யும் அளவுக்கு ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டிருக்கின்றது.

**என்னதான் தீர்வு?**

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு வரை வட கிழக்கு மாநிலங்களுக்குள் செல்லக்கூட யாரும் முயன்றதில்லை. இனக் குழுக்களின் மோதல்களாலும் வன்முறைகளாலும் அந்தப் பகுதியை வேறொரு உலகமாகவே பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கருதினர். சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டின் பிற மாநிலங்களில் வன்முறைகள் நிகழ்ந்தபோதுகூட, வட கிழக்கு அமைதியாக இருந்தது. இது வினோதமாக உணரப்பட்டது. தங்களுக்குள் சண்டையிடாமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும், இந்தியாவின் பிற மாநிலங்களுடன் இணைந்து முன்னேற வேண்டும் என்ற எண்ணமே அவர்களிடம் அப்போது நிலவியது.

இன்று சாலை மார்க்கமாகவும் ரயில் பாதைகள் மூலமும் வட கிழக்கு மாநிலங்கள் இந்தியாவின் பிற மாநிலங்களுடன் இணைக்கப்பட்டுவிட்டதால், பிற மாநிலங்களின் வளர்ச்சிக்கும்கூட தங்களுடைய பங்களிப்பை அளிக்க வேண்டும் என்றே அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். வட கிழக்கு மாநிலங்களில் வசிக்கும் பழங்குடிகள் தேசிய நீரோட்டத்தில் சேருவது படிப்படியாகத்தான் நடைபெற வேண்டும். அதை விரைவுபடுத்துவதற்காக, அவர்களுடைய மனப்போக்கை அறியாமல் எடுக்கப்படும் நிர்வாக, நீதித் துறை நடவடிக்கைகள் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்திவிடும். எல்லா பழங்குடி சமூகங்களும் பரஸ்பரம் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் செயல்களையே இராணுவமும் அரசுகளும் மேற்கொள்ள வேண்டும்!

## *பெண்ணின் கணவர் இந்திய இராணுவ வீரர்*

**இ**தனிடையே, மணிப்பூர் வீடியோவில் காணப்பட்ட பெண்களில் ஒருவரின் கணவர் இந்திய – பாகிஸ்தான் எல்லைப்பகுதியான கார்கில் போரில் பங்கேற்ற முன்னாள் இராணுவ வீரர் ஆவார். இந்திய இராணுவத்தில் அசாம் ரெஜிமென்ட்டின் அதிகாரியாகப் பணியாற்றியவர். உள்ளூர் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறும்போது, 'நான் கார்கில் போரில் போராடியவன். அதேபோல் இலங்கைச் சென்ற இந்திய அமைதிக் குழுவில் இருந்திருக்கிறேன். நாட்டைப் பாதுகாக்க முடிந்த என்னால் என் மனைவியையும், என் சக கிராமத்தினரையும் காப்பாற்ற முடியவில்லையே' என்றார் வேதனையாக.

மேலும் அவர், 'துக்ககரமான அந்த மே 4ந் திகதி எனது கிராமத்தில், அந்தக் கும்பல் பல வீடுகளை எரித்து இரண்டு பெண்களை நிர்வாணப்படுத்தி கிராமத்து சாலையில் பலர் முன்னிலையில் ஊர்வலமாக அழைத்து சென்றது. இந்தச் சம்பவங்கள் நடக்கும்போது பொலிசார் அங்கே இருந்தனர். ஆனால் எதுவும் செய்யவில்லை. வீடுகளுக்கு தீ வைத்து பெண்களிடம் மனிதாபிமானம் இல்லாமல் நடந்து கொண்டவர்களுக்கு அதிகபட்சமான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்' என்றார்.

# உலகை உலுக்கும் தனியார் இராணுவ கூலிப்படைகள்

ரஷ்யாவில் இயங்கி வரும் தனியார் இராணுவப் கூலிப்படையான வாக்னர் (Wagner) குழுவும், அதன் தளபதி யெவ்னி பிரிகோஷினும் (Yevgeny Prigozhin) தான் தற்போது நடைபெற்று வரும் உக்ரைன் ரஷ்ய யுத்தத்தின் விவாதப் பொருளாக இருக்கின்றனர். குறிப்பாக ஐரோப்பிய, அமெரிக்க ஊடகங்கள் இந்தச் செய்தியை ரஷ்யாவை பலவீனப்படுத்துவதற்கான மிகப்பெரும் பிரச்சாரமாகவே முன்னெடுக்கிறார்கள். இந்தத் தருணத்தில் தனியார் இராணுவ கூலிப்படை என்பது வாக்னர் குழு மட்டுமல்ல, உலகில் இன்னும் பல கூலிப்படைகள் இயங்கி வருகின்றன என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். நவீன காலத்தில் பல கூலிப்படைகள் முறைப்படுத்தப்பட்ட இராணுவத்திற்கு சமமான அளவில் செயல்பட ஆரம்பித்துள்ளன.

யெவ்னி பிரிகோஷின் யுத்த களத்தில் இருக்கும் போது ஜுன் 23ந் திகதி ரஷ்ய இராணுவ தலைமைக்கு எதிராக கலகத்தை ஆரம்பித்தார். 24 மணி நேரத்தில் அவர் அறிவித்த கலகம் முடிவுக்கு வந்தது. வாக்னர் குழுவின் கலகத்தை ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புட்டின் மக்களுக்கு எதிரான தேசத்துரோகம் என்று குற்றம் சாட்டி, ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படும், மரண தண்டனை உட்பட சட்ட ரீதியாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தார். உடனடியாக பிரிகோஷின் தனது கலகத்தை வாபஸ் வாங்குவதாக அறிவித்தார்.

யுத்த காலத்தில் இது ஒரு மோதலாக மாற வேண்டாம், அப்படிப்பட்ட மோதல் உக்ரைன் யுத்தத்திற்கு ரஷ்யாவிற்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்ற பின்புலத்தில் பிரிகோஷன் மீதான சட்ட நடவடிக்கை கைவிடப்பட்டு, பெலாரஸ் நாட்டில் தஞ்சமடைய அவர் அனுமதிக்கப்பட்டார். ஜுலை 1ந் திகதிக்குள் அனைத்து ஆயுதங்களும் இராணுவ கவசவாகனங்கள் உட்பட ஒப்படைக்கப்பட வேண்டும் என்று காலக்கேடு விடுக்கப்பட்டது. (அக்காலக்கெடுவுக்கு அமைய வாக்னர் குழுவின் ஆயுதங்கள் ரஷ்ய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.) ரஷ்ய இராணுவம் பலம் வாய்ந்தது என்பதும், இந்த கலகத்தை அடுத்து, விளாடிமிர் புட்டின் ரஷ்ய இராணுவத்தையும் ஒன்றுபடுத்தி இருப்பதுடன், மக்களின் ஆதரவையும் அதிகப்படுத்தி இருப்பதாக களநிலவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு மீது வாக்னர் குழுவின் முன்வைத்த குற்றச்சாட்டுகளும் மறுக்கப்பட்டுள்ளன.



### யார் இந்த யெவ்னி பிரிகோஷின்?

*1961* ஆம் ஆண்டு, முந்தைய லெனின்கிராட் (Leningrad) தற்போதைய செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் (Sint-Petersburg) என்ற நகரத்தில் பிறந்தார். தனது 20 வயதில் மோசடி குற்றங்களுக்காக *9* ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலை அடைந்த பிறகு, அவர் தொழில் அதிபராக மாறினார். சிறிய தொழில்களில் ஆரம்பித்து, *1990* ஆம் ஆண்டு ஓர் உணவகத்தைத் துவங்கினார். காலப்போக்கில் அது கொன்கோர்ட் (Concord) என்ற பெரிய உணவமாக மாறியது.

அப்போது செயின்ட் பீட்டர்ஸ்பேர்க் நகரத்தின் துணை மேயராக விளாடிமிர் புட்டின் இருந்தார். அதனால் பிரிகோஷினுக்கு அவரது நட்பு கிடைத்தது. புட்டின் ரஷ்ய அதிபரான பிறகு அரசு விழாக்களுக்கும், வெளிநாட்டிலிருந்து அரசு தலைவர்கள் வருகிற பொழுது நடைபெறுகிற நிகழ்வுகளுக்கும், ரஷ்ய இராணுவத்திற்கும் உணவு தயாரித்துக் கொடுக்கும் மிகப்பெரும் ஒப்பந்தங்களை பெற்று தனது உணவகத்தை பெரும் உணவகமாக மாற்றினார். இதனால் இவரை விளாதிமிர் புட்டினின் 'சமையல்காரர்' என்று அழைப்பார்கள்.

பிரிகோஷின் வேறு சில நிறுவனங்களையும் துவக்கினார். குறிப்பாக இணையத்தளம் துறையில் இன்டர்நெட் ரிசேர்ச் ஏஜென்சி (Internet Research Agency) என்று நிறுவனத்தை துவக்கி குறிப்பிடத்தக்க ஆதிக்கத்தை இத்துறையில் செலுத்தினார். 2016 ஆம் ஆண்டு அமெரிக்க தேர்தலில் இந்த நிறுவனம் தலையிட்டது என்ற விமர்சனம் பத்திரிகைகளில் வெளிவந்த பொழுது, அவர் அவ்வாறு இல்லை என்று மறுத்ததுடன், பொய்யான செய்தியை வெளியிடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தார். இதன்பிறகு இந்த நிறுவனத்தின் மீதான விமர்சனம் நிறுத்தப்பட்டது.

**அ.பாக்கியம்**

உணவகம் மற்றும் வலையத்தளத்தை அடுத்து, இராணுவத்திற்கு உணவு கொடுப்பதன் மூலமாக கிடைத்த தொடர்புகளை பயன்படுத்தி பிரிகோஷன் தனியார் இராணுவப் படை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். 2014 ஆம் ஆண்டு வாக்னர் படை என்ற பெயரில் ரஷ்ய அரசின் உதவியுடன் இராணுவத்தை அமைத்தார். முன்னாள் இராணுவ வீரர்கள், புதிய வேலையில்லாத இளைஞர்கள் ஆகியவர்களையும் இதில் இணைத்தார். சிறையிலிருந்து விடுதலையான குற்றவாளிகளையும் அவர் வாக்னர் இராணுவத்தில் சேர்த்தார்.

2014 ஆம் ஆண்டு உக்ரைனில் யுத்தம் செய்தார்கள் என்ற தகவல் தவறான தகவலென வாக்னர் படையினர் தெரிவித்துள்ளனர். தனியார் கூலிப்படையை ஆரம்பித்த உடன் யுத்த களத்திற்கு செல்வதென்பது சாத்தியமில்லை. தற்போது நடைபெறக்கூடிய உக்ரைன் யுத்தத்தில் ரஷ்ய இராணுவம் வாக்னர் குழுவை வலுவாக பயன்படுத்தி வந்துள்ளது. குறிப்பாக, ரஷ்யர்கள் அதிகமான வாழும் பகுதிகளில் பாதுகாப்பு வழங்குவதிலும், தற்போது உக்ரைனில் ரஷ்யா மேற்கொண்டுள்ள விசேட இராணுவ நடவடிக்கையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாக்முட் (Bakhmut) நகரை கைப்பற்றி உக்ரைன் படைகளை அடிபணிய வைத்ததிலும் இந்தக் குழுவின் பங்கு குறிப்பிடத்தக்கது என்பதால், வாக்னர் படையும், பிரிகோஷினும் ரஷ்யாவில் புகழ்பெற்றார்கள்.

இந்தப் புகழின் மோகமாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராகவும், ரஷ்ய இராணுவ தளபதிக்கு எதிராகவும் பிரிகோஷின் போர்க்கொடி உயர்த்தினார். இதனை பிரிகோஷினின் அரசியல் பிரவேசத்திற்கான அறிவிப்பு என்று கூட பத்திரிகைகள் எழுதின. அத்துடன் புட்டின் தனது இராணுவ தளபதிகளை கட்டுக்குள் வைத்துக்கொள்ள இவரை பயன்படுத்துகின்றார் என்ற கருத்தும் உள்ளது. இவரது இராணுவப் படையில் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள் இருப்பதாக கூறப்படுகிறது. ரஷ்யாவின் சட்டத்தில் கூலிப்படைகளை உருவாக்கவோ அல்லது இயங்க வைக்கவோ இடமில்லை என்ற போதிலும், தற்போது முற்றுமுழுதாக வாக்னர் தனியார் இராணுவக் கூலிப்படையாகவே முடக்கப்பட்டுள்ளது.

இந்த கலவரத்தை புட்டின் அடக்குவதற்கான அறிவிப்புகள் செய்தாலும், 1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற இராணுவக்கலகம் போல் என்று ஒப்பிட்டு பேசியிருப்பதனை, அவர் வரலாற்றினை தவறான வழியில் சிதைக்கிறார் என்றே கூறவேண்டும். 1917 ஆம் ஆண்டிற்கு பிறகு ரஷ்யாவில் எந்த இராணுவ கலகமும் நடைபெறல்லை என்றும் புட்டின் பேசியிருக்கிறார்.

இதே போன்று தான் அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் 1917 ஆம் ஆண்டு நெருக்கடி போல் ரஷ்யாவில் ஏற்பட்டுள்ளது என்று இந்தக் கலகம் பற்றி கருத்து தெரிவித்தார். 1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற இராணுவக்கலகம் சார் மன்னராட்சிக்கு எதிரானது. இதையடுத்து அதே ஆண்டில் ஏற்பட்ட புரட்சி, சமூக மாற்றத்திற்கான புரட்சி. உலகையே புரட்டிப் போட்ட புரட்சி. எனவே வாக்னர் கலகத்தை அதனுடன் ஒப்பிடுவது புட்டினின் முதலாளித்துவ வர்க்க பாசத்தையே வெளிப்படுத்துகின்றது. இதேபோன்றே உக்ரைன் யுத்தம் ஆரம்பித்த காலத்தில் (2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில்), லெனின் கடைபிடித்த பிரிந்து போகும் உரிமை உட்பட சுயநிர்ணய உரிமைதான் சோவியத் சிதறுவதற்கு காரணம் என்று ரஷ்ய இனவாத சிந்தனையை வெளிப்படுத்தும் விதமாக கருத்தொன்றினைத் தெரிவித்திருந்தார் என்பதும் இங்கு நினைவுபடுத்தத் தக்கது.

**மேற்குலக ஆசை நிமிடங்களில் தவிடு பொடியானது**

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவில் என்ன நடக்கிறது என்ற முடிவுக்கு வரும் முன்னரே வாக்னர் கலகம் முடிவுக்கு வந்துவிட்டது. ரஷ்யாவை எதிர்ப்பதற்கு தனக்கு ஒரு கூட்டாளி கிடைத்துவிட்டார் என்று உக்ரைனும் மேற்குலகமும் நினைத்த மாத்திரத்தில், அவை நிறைவேறாமல் நிராசையாக மாறிவிட்டது. மேற்கத்திய ஊடகங்கள் மற்றும் அதன் அரசு தலைவர்கள் குறிப்பாக ஜெர்மனிய பத்திரிகைகள் மிகப்பெரும் அளவிற்கு ரஷ்ய எதிர்ப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

ரஷ்யாவில் உள்நாட்டுப் போர் துவங்கிவிட்டது, இந்த கலகம் புட்டின் முடிவுக்கான துவக்கம், விளாதிமிர் புட்டினின் பலவீனம் வெளிப்பட்டு இருக்கிறது என்றெல்லாம் எழுதினார்கள். இதோ மொஸ்கோ வீழ்கிறது, சீனா ரஷ்யாவிற்கு கொடுக்கும் ஆதரவு பற்றி பரிசீலிக்கிறது என்று அவர்களின் விருப்பங்கள் அனைத்தையும் எழுதித் தீர்த்தார்கள். வாக்னர் குழு உக்ரைனில் மட்டுமல்ல, லிபியா, ஆபிரிக்க நாடுகள் (58 ஆப்பிரிக்க நாடுகளில் சரி பாதி அமெரிக்க நிலைப்பாட்டை ஏற்கவில்லை), சிரியா, வெனிசுவேலா ஆகிய நாடுகளில் அவர்கள் இருக்கிறார்கள் என்று ஜெர்மனிய பத்திரிகை விரிவான முறையில் கட்டுரை எழுதி இருக்கிறது.

இந்தக் கட்டுரைகள் ரஷ்யாவிற்கு ஆதரவாக இருக்கக்கூடிய நாடுகளை எதிர்ப்பக்கம் திருப்பக்கூடிய முறையிலும், அமெரிக்கா மட்டும் உலக நாடுகளின் அதிகாரத்தில் தலையிடுகிறார்கள் என்பதல்ல, ரஷ்யாவும் தலையிடுகிறது என்று சமப்படுத்தி நிறுவுவதற்கான முயற்சிகளாகும். யெவ்னி பிரிகோஷின் பெலாரஸ் நாட்டில் தஞ்சம் அடைந்ததை அருகில் உள்ள போலந்து, லாட்வியா போன்ற நாடுகள் பேராபத்து என்றும் நேட்டோ தலையிட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்கள். உக்ரைன் யுத்தத்தில் நடுநிலையாக இருக்கக்கூடிய நாடுகளை குறிப்பாக இந்தியா, சீனா, சவூதி அரேபியா, துருக்கி போன்ற நாடுகளை அமெரிக்கா தனது நிலைப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பிரச்சாரங்களை மேற்கொண்டார்கள். இந்தியா, சீனா உட்பட பல ஆபிரிக்க நாடுகள் அமெரிக்காவின் இந்த முயற்சியை ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல, உக்ரைன் யுத்ததை முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்தைக்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர்.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பின் தலைமை, ரஷ்யாவில் குழப்பத்தை ஏற்படுத்த எடுத்த முயற்சி தோல்வி அடைந்தது. ரஷ்யாவின் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரத் தடைகளும் வெற்றி பெறவில்லை. தற்போது ரஷ்யாவின் நாணய மதிப்பு யுத்தத்திற்கு முன்பு இருந்த நிலையை எட்டியுள்ளது. இந்தியாவும், சீனாவும் ரஷ்யாவிடமிருந்து அதிகமான கச்சா எண்ணெயை வாங்குவது ரஷ்யாவின் பொருளாதார நெருக்கடியை தீர்த்து வருகின்றது.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் இந்த சூழ்நிலையை பயன்படுத்தி ரஷ்யாவை வீழ்த்தி விடலாம் என்ற நோக்கத்தோடு தொடர்ச்சியாக ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்குவது மிகப்பெரிய ஆபத்தாகும். உலகின் பாதி அணு ஆயுதங்கள் உள்ள ஒரு நாட்டில், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு பதிலாக, ஆயுதங்களை வழங்கி யுத்தத்தை நீடிக்கசெய்வது மிக ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும் என்று பல அறிஞர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். உக்ரைன் நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இந்த நேரத்தில் ஆயுதங்கள் அதிகமாக கொடுத்தால் ரஷ்யாவை வீழ்த்தி விடலாம் என்று பேசுகிறார். இந்த பேச்சின் நோக்கம்

கூடுதல் ஆயுதங்களையும், நிதி உதவியும் பெறுவதாக தான் உள்ளது. நேட்டோவின் தலைவர்கள் இந்த தருணத்தை பயன்படுத்தி உக்ரைனுக்கு தேவையான ஏவுகணைகள் உட்பட அனைத்து விதமான ஆயுதங்களையும் உடனே அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

வாக்னர் படையினரின் கலகம் தொடங்கிய அடுத்தநாளே ஐரோப்பிய ஒன்றியம் 3.8 பில்லியன் டொலர் நிதியை ஒதுக்கீடு செய்து, உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்புவதாக அறிவிப்பு விடுத்தது. இதுவரை ஐரோப்பிய ஒன்றியம் யுத்த தளவாடங்களுக்காக 13 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுதங்களை அளித்துள்ளது. அமெரிக்கா இதற்கு பத்து மடங்கிற்கும் அதிகமான பெறுமதியில் ஆயுதங்களையும் நிதிகளையும் கொடுத்துள்ளது. யுத்தம் எந்த வகையிலும் முடிவுக்கு வந்து விடக்கூடாது என்பதில் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் கவனமாக இருக்கிறார்கள். ஐரோப்பிய, அமெரிக்க கோப்ரேட் ஊடகங்களின் பெரும் பிரச்சார முன்னெடுப்பினால், இந்தியா உட்பட சில நாடுகளின் பத்திரிகைகள் ரஷ்ய – உக்ரைன் யுத்தம் தொடர்பான கட்டுரைகளை எழுதுகிற பொழுது மேற்கத்திய சாயல் கருத்துக்களை தாங்கியே வருகின்றன.

புட்டின் தொடுத்த யுத்தத்தை யாரும் அதிகாரப்பூர்வமாக ஆதரிக்கவில்லை. ஆனால் இந்த யுத்தத்திற்கான காரணம் அமெரிக்க தலைமையிலான நேட்டோ அமைப்பின் விரிவாக்கமும், அதன் மூலம் ரஷ்யாவையும் துண்டு துண்டாக்கி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியும் தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே தான் அமெரிக்கா இந்த யுத்தம் முடிவுக்கு வருவதை விரும்பாமல் நீடிக்கச் செய்கின்றது.

**தனியார் இராணுவ கூலிப்படைகள் (Private Military Company - PMC)**

உக்ரைன்–ரஷ்ய யுத்தம் மேலும் ஒரு புதிய ஆபத்தின் வளர்ச்சி போக்கை வெளிப்படுத்தி உள்ளது. அதுதான் தனியார் இராணுவ கூலிப்படையாகும். முதலாளித்துவ வளர்ச்சி கட்டத்தில் தேசிய அரசுகள் உருவாகாத சூழலில் பலரும் படைகளை பராமரித்தார்கள். கிழக்கு இந்திய கம்பெனி தனது நியாயமற்ற வணிக நோக்கத்தை நிறைவேற்றிட கம்பெனியின் பெயரில் இராணுவத்தையும், கப்பற்படையும் வைத்திருந்தது. இவையெல்லாம் சிறு சிறு சண்டைகள் யுத்தங்கள் போன்றவற்றில் பயன்பட்டது. பிறகு ஒவ்வொரு நாடும் மிகப் பெரும் இராணுவத்தை கட்டி அமைத்தனர்.

பனிப்போர் முடிந்த பிறகு அமெரிக்க தலைமையிலான தனியார் இராணுவ கூலிப்படைகள் மிக அதிகமாக பெருக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு மட்டும் தனியார் இராணுவ கூலி படைகளுக்கான (மேற்கு நாடுகள் மற்றும் அமெரிக்கா) முதலீடு 224 பில்லியன் டொலர் ஆகும். 2030 ஆம் ஆண்டு இது 457 பில்லியன் டொலர் அளவிற்கு உயரும் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது. அநேகமாக ஒரு நாட்டின் இராணுவத்திற்கு சமமாக தனியார் இராணுவ கூலிப்படைகளும் இன்றைய தினம் உருவாகிவிட்டது அல்லது உருவாக்கப்பட்டுள்ளது.




அமெரிக்காவில் பிளாக் வாட்டர் (Blackwater) என்று சொல்லக்கூடிய தனியார் கூலிப்படை இராணுவம் தான் உலகத்தில் பெரியது. முன்னாள் இராணுவ அதிகாரி எரிக் பிரின்ஸ் (Erik Prince) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போரின் போதுதான் அதிகமான அளவு கூலிப்படைகள் பயன்படுத்தப்பட்டன. பிளாக் வாட்டர் படை அதிக பங்கை இந்த இருநாடுகளிலும் செய்தது, 2003 ஆம் ஆண்டு ஈராக் நாட்டில் உள்ள அமெரிக்க ஆதரவு இராணுவத்திற்கும், காவல்துறைக்கும் இவர்கள்தான் பயிற்சி கொடுத்தார்கள். அன்றைய தினம் சுமார் 40,000 வீரர்களை கொண்டிருந்தது. ஆயுத மோதல்கள் மூலமாகவே அதிகமான பணத்தை இவர்கள் பெறுகிறார்கள்.

இன்னும் குறிப்பாக சொல்லப் போனால் அமெரிக்காவின் பட்ஜெட்டில் 2001 ஆம் ஆண்டு கூலிப்படைக்கு 735,000 டொலர்தான் ஒதுக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டில் 25 மில்லியன் டொலர்களாகவும், 2006 ஆம் ஆண்டு 600 மில்லியன் டொலர்களாகவும் இந்த பிளாக் வாட்டர் தனியார் இராணுவ கூலிப்படைக்கு ஒதுக்கப்பட்டது. சராசரி ஓர் அமெரிக்க இராணுவ வீரனுக்கு தினசரி ஒதுக்கக் கூடிய தொகை 150 டொலரில் இருந்து 190 டொலர் வரை தான். ஆனால் இந்த கூலிப்படைக்கு தினசரி அமெரிக்க பட்ஜெட் ஒதுக்கியது 1200 டொலர்களாகும்.

ஈராக் நாட்டின் நூசூர் நகரத்தில் ஒரே நேரத்தில் 17 பொதுமக்களை விசாரணையின்றி தூக்கில் போட்டார்கள். இதுபோன்ற எண்ணற்ற கொடூர செயல்களை இந்த கூலிப்படை ஈராக்கில் செய்தது. கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்களையும் பொது மக்களையும் கொடும் சித்திரவதைக்கு உள்ளாக்கியவர்கள். ஆயுதக் கடத்திலிலும் கள்ளச்சந்தையில் ஆயுத விற்பனையிலும் மிக முக்கிய பங்கு வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தனது பெயரை அகாடமி என்று மாற்றிக் கொண்டது.

வேறு சில பணிகளையும் செய்வதற்கான ஒப்பந்தங்களை எடுத்து தங்களுடைய கூலிப்படை குற்ற செயல்களை மறைத்துக் கொண்டார்கள். மற்ற நாடுகளில் அமெரிக்க ஆதரவு இராணுவத்திற்கு பயிற்சி கொடுப்பது, ஆப்கானிஸ்தான், இஸ்ரேல், ஈராக் போன்ற நாடுகளில் உள்ள அமெரிக்க தூதர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது என்று பணிகள் ஒதுக்கப்பட்டது.

100 இற்கும் மேற்பட்ட தனியார் இராணுவ கூலிப்படைகள் அமெரிக்காவில் செயல்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. G4S என்ற தனியார் இராணுவ கூலிப்படை அமெரிக்காவின் பாதுகாப்புக்காக 125 நாடுகளில் கிளை வைத்துள்ளது. 2006 முதல் 2008 ஆம்ஆண்டு வரை அமெரிக்க தொழிலாளர்கள் மீது தாக்குதலுக்கும், அமெரிக்கா தலையீடுகள் செய்யக்கூடிய நாடுகளில் மக்கள் எதிர்ப்பை அடக்குவதற்கும் இந்த கூலிப்படை பயன்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கிற பொழுது உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பாதுகாப்பு அளிப்பதற்கான பொறுப்பு இந்த கூலிப்படையிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2009 ஆம்

ஆண்டு இந்த கூலிப்படை செய்த கொலைகளும், கொள்ளைச் சம்பவங்களும் பெரிய அளவிற்கு அம்பலப்படுத்தபட்டன.

மற்றொரு தனியார் இராணுவ கூலிப்படை டைன் கோர்ப் (Dyn Corp) ஆகும். இதில் 24 ஆயிரம் இராணுவ வீரர்கள் இருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானிற்கும், ஈராக்கிற்கும் இந்த கூலிப்படையிலிருந்துதான் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட படைவீரர்கள் அனுப்பப்பட்டார்கள். அமெரிக்காவின் கெட்ட பெயர் எடுத்த சி.ஐ.ஏ (CIA) மற்றும் எப்.பி.ஐ (FBI) போன்ற நிறுவனங்கள் தமது பாதுகாப்பிற்காக 50 சதவீதம் இந்த தனியார் இராணுவ கூலிப்படையை நம்பித்தான் இருக்கின்றன. இந்தப் கூலிப்படை கிழக்கு ஐரோப்பாவில் பொஸ்னியா நாட்டில் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுத்தத்தை ஒட்டி அனுப்பப்பட்ட பொழுது, பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக பெண்களையும் குழந்தைகளையும் விற்பனை செய்தது. இது தொடர்பாக ஆதாரப்பூர்வமாக பல புகார்கள் வந்த பிறகும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2001 ஆம் ஆண்டு ஈக்குவடோர் நாட்டில் விவசாயிகளின் பயிர்கள் மீது களைக்கொல்லி மருந்துகளை திருட்டுத்தனமாக வீசி விவசாயத்தை நாசம் செய்யும் பணிகளை இந்த கூலிப்படை நிறைவேற்றியது. இவர்கள் ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்த பொழுது குழந்தை விபச்சாரத்தை நடத்தினார்கள் என்றும் பெரும் குற்றச்சாட்டுகள் எழுந்தது.

எம்.பி.ஆர்.ஐ (MPRI) என்ற அமெரிக்க தனியார் இராணுவ கூலிப்படை 1995 இல் குரோஷியா நாட்டில் இன அழிப்பு கொடுமைகளில் ஈடுபட்டது. அல்பேனியா நாட்டில் கிளர்ச்சி ஏற்படுத்தி ஆட்சி கவிழ்ப்புக்கு இந்த படை உறுதுணையாக இருந்தது. ஆப்கானிஸ்தான் மற்றும் பொஸ்னியா நாடுகளில் இஸ்லாமியர்களுக்கு என இருந்த படைப்பிரிவுக்குள் நுழைந்து, அமெரிக்க உளவு அமைப்பு சி.ஐ.ஏ வழிகாட்டியதன் அடிப்படையில் செயல்பட்டார்கள்.

ஏஜிஸ் டிபன்ஸ் சேர்வீஸ் (Aegis Defence Service) என்ற தனியார் இராணுவ கூலிப்படை இங்கிலாந்தில் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து ஈராக் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது. யுத்தம் நடைபெற கூடிய இடங்களில் தூதரகங்களை பாதுகாக்கும் பொறுப்பை இந்த கூலிப்படை ஏற்றுக் கொண்டது.

இங்கிலாந்தில் எர்னிஷ் இன்டர்நேஷனல் (Erinys International) என்ற தனியார் இராணுவ கூலிப்படை ஈராக் நாட்டிற்கு அனுப்பப்பட்டு ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் கைதிகளை சித்தரவதை செய்யும் செயல்களில் ஈடுபட்டது. அதிகமாக மனித உரிமை மீறலில் ஈடுபட்ட தனியார் இராணுவப் படை என்று குற்றச்சாட்டுக்கு ஆளானது.

நோர்த்பிரிட்ஜ் சேர்வீஸ் லிமிடெட் (Northbridge Services Group Ltd) என்ற தனியார் இராணுவப்படை பிரிட்டனில் ஆரம்பிக்கப்பட்டு அமெரிக்க தனியார் இராணுவ படையுடன் இணைந்து டொமினிகன் குடியரசில் பதிவு செய்தார்கள். இந்த தனியார் இராணுவ கூலிப்படை தற்போது உக்ரைனுக்கு அதிகமான கூலிப்படைகளை அனுப்பி உள்ளது. இந்தக் கூலிப்படையில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் பிரிட்டிஷ் இராணுவ வீரர்களும், பிரான்ஸ், அமெரிக்காவை சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். 2003 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவில் உள்ள லைபிரிய நாட்டில் அரசுக்கு எதிரான கலவரங்களுக்கு இந்த படை அனுப்பப்பட்டு உதவி செய்து, அந்த அரசை தூக்கி எறிய கூடிய வேலையை முடித்தது, அந்நிய நாட்டுக்குள் புகுந்து அப்பட்டமான முறையில் அரசுக்கு எதிரான செயல்களில் இறங்கினார்கள். அந்த நாட்டின் ஜனாதிபதியை சி.ஐ.ஏ கடத்திச் செல்வதற்கு சிறப்பு திட்டத்தை தயாரித்துக் கொடுத்தவர்கள் இந்த கூலிப்படையை சேர்ந்தவர்கள்தான், ஐக்கிய நாடுகள் சபையின் தலையிட்டால் அது நடைபெறவில்லை.


தனியார் இராணுவ கூலிப்படையில் சேர்வதற்கு உலகம் முழுவதும் இருந்து பலர் ஆர்வமாக இருப்பதாக செய்திகள் வெளிவருகின்றது. குறிப்பாக எக்கனாமிக் டைம்ஸில் (Economic Times) வெளிவந்த செய்தி இந்தியாவுடன் தொடர்புடையது. நேபாள நாட்டிலிருந்து ஏராளமான இளைஞர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், வாக்னர் குழுவில் சேர்கிறார்கள் என்ற செய்தியை அது வெளியிட்டது. அவ்வாறு சேரக்கூடிய வீரர்களுக்கு ஓராண்டுக்குப் பிறகு ரஷ்ய குடியுரிமை வழங்கப்படும் என்ற சலுகை இருப்பதாகவும் அதனால் சேருகிறார்கள் என்றும் தெரிகின்றது. நேபாள அரசு இது அவர்களுடைய தனிப்பட்ட விஷயம், நாங்கள் என்ன செய்ய முடியும் என்ற வகையில் முடித்துக் கொண்டார்கள். இந்திய அரசு நேபாள வீரர்களை இராணுவத்தில் எடுப்பதை நிறுத்திவிட்டது மட்டுமல்ல, அக்னி பாத் என்ற பெயரால் நிரந்தர இராணுவ பணியை ஒழித்துக் கட்டியதும் இதற்கு முக்கிய காரணம் என்றும் வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்கள் இதுபோன்ற அண்டை நாடுகளில் இணைவது இந்தியாவுக்கு ஆபத்து என்று காங்கிரஸ் கட்சி ஜெயராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பனிப்போர்தான் உலகை பதட்டமாக வைத்திருக்கிறது என்று கருதப்பட்ட காலம் முடிந்து, அமெரிக்கா தலைமையில் ஒற்றை உலகம் என்ற நிலை ஏற்பட்ட பொழுதும் யுத்தங்கள் குறையவில்லை. அதன் பிறகு தான் அமெரிக்கா பயங்கரவாதம் என்ற பெயரால் எண்ணெய் மற்றும் இயற்கை வளமுள்ள நாடுகளையும் சுரண்டுவதற்காக மத்திய ஆசிய நாடுகளிலும் இலத்தின் அமெரிக்க நாடுகளிலும் பல படையெடுப்புகளினை நடத்தியது. யுத்தம் இல்லாமல் முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும் உயிரோடு இருக்க முடியாது. உலகம் முழுவதும் 850 இற்கு மேற்பட்ட இராணுவ தளங்களை 155 நாடுகளுக்கு மேல் அமெரிக்கா நிறுத்தி உள்ளது. இந்த வளர்ச்சிப் போக்கில் தனியார் இராணுவ கூலிப்படைகள் புதிய நிலைமைகளாகும்.

ஏற்கனவே அரசின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவ அமைப்பு, பல மனித உரிமை மீறல்களையும், அடக்குமுறைகளையும் செய்து கொண்டு இருக்கின்றது. இருந்தாலும் அதற்கான விதிகளும், யுத்தம், யுத்த கைதிகள், பொதுமக்கள் மீது தாக்குதல் போன்றவற்றுக்கெல்லாம் விதிகளை மீறினால் அதற்கான நடவடிக்கை என்ற குறைந்தபட்ச ஏற்பாடுகள் இருந்தது.

தனியார் இராணுவ கூலிப்படைகளுக்கு இவைகள் ஒருபொருட்டே இல்லை, கொடூரங்களை தவிர வேறு எதுவும் உலகில் மீதம் இருக்காது. அதிக கூலி – அதிக கொடுமைகள் என்ற கோட்பாட்டில்தான் இந்த தனியார் இராணுவப்படை செயல்படுகிறது. புதிய நிலைமைகள் உழைப்பாளி மக்களுக்கு பெரும் சவால்தான், காரணம், அவர்களுக்கே இழப்புகள் அனைத்தும். உழைப்பாளி மக்களின் விழிப்பும் ஒன்றுசேரலும் இல்லாமல் இதனைத் தடுத்து நிறுத்த முடியாது.

# கட்சிப் பத்திரிகையின் முக்கியத்துவம்



கட்சிப் பத்திரிகையின் முக்கியத்துவத்தை எப்போதுமே குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. 1901இல் மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறும் இடைக்காலத்தின்போது, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தலைமையேற்று வழிகாட்டிய தோழர் லெனின், “எங்கிருந்து தொடங்குவது?” என்னும் தன்னுடைய நூலில் கூறியதாவது: “நம்முடைய கருத்தோட்டத்தின்படி, நம்முடைய செயல்களின் தொடக்கப்புள்ளி, நமக்குத் தேவையானதொரு ஸ்தாபனத்தை நாம் உருவாக்குவதற்கு முன்னோடியாக நாம் எடுத்து வைக்கும் முதல் அடி என்பது, அல்லது, நாம் உருவாக்கும் ஸ்தாபனத்தை வளர்த்தெடுத்து, ஆழமாக்கி, விரிவான முறையில் உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கானப் பிரதான இழையாக இருப்பதென்பது, நமக்காக ஓர் அகில ரஷ்ய அரசியல் பத்திரிகையைத் துவக்குவது என்பதேயாகும். நம் அனைவருக்கும் தேவையான ஓர் அரசியல் பத்திரிகை. அத்தகைய பத்திரிகையின்றி, பொதுவாக சமூக ஜனநாயகத்தைக் கட்டுவதற்கும், அடிப்படையாக உள்ள கொள்கை உறுதியுடன் நம்முடைய பிரச்சாரத்தை, கிளர்ச்சியை முறையுடன் முன்னெடுத்துச் செல்ல முடியாது. தனிநபர் நடவடிக்கை, வட்டார அளவிலான துண்டுப்பிரசுரங்கள், சிறுவெளியீடுகள் போன்ற வடிவங்களுடன் நம் பொதுவான மற்றும் திட்டமிட்ட முறையில் கிளர்ச்சிகளை நடத்திட நமக்கு என்று ஒரு பத்திரிகையின் அவசியமும் இப்போது உருவாகியிருப்பதுபோல முன்னெப்போதும் உருவானதில்லை. அத்தகையதொரு பத்திரிகையின்றி, நாம் நம்முடைய கடமையை – மக்கள் மத்தியில் ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக நிலவும் அரசியல் அதிருப்தி மற்றும் எதிர்ப்புணர்ச்சியை ஒன்றிணைத்து, ஒருமுகப் படுத்தி, தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியை – முழுமையாக செய்துமுடிக்க முடியாது.”

மேலும் அவர் கூறுகிறார்: “ஆயினும், பத்திரிகையின் பங்களிப்பு என்பது, கட்சியின் சிந்தனைகளைப் பரவச் செய்தல், ஊழியர்களுக்கு அரசியல் கல்வியை அளித்தல் மற்றும் அரசியல் நண்பர்களை அணிசேர்த்தல் ஆகியவற்றுடன் மட்டும் சுருங்கிவிடவில்லை. ஒரு பத்திரிகை என்பது ஒரு கூட்டுப்பிரச்சாரகன், ஒரு கூட்டு கிளர்ச்சியாளன் மட்டுமல்ல, அது ஒரு கூட்டு அமைப்பாளனும் ஆகும்.”

பின்னர், “என்ன செய்ய வேண்டும்?” என்னும் நூலில் லெனின் கூறுகிறார்: “நம் பத்திரிகை என்பது வர்க்கப் போராட்டத்தின் ஒவ்வொரு தீப்பொறியையும் விசிறிவிடும் கொல்லனின் துருத்தி போன்று இருப்பதுடன், மக்களின் நேர்மையான சீற்றங்களை ஊதி, ஊதி காட்டுத் தீயாக கொழுந்துவிட்டெரியச் செய்யும் பணியையும் செய்வதாகும். இன்றையதினம் அது ஆற்றும் பணி மிகவும் மந்தமானதாக, சிறிய அளவினதாக இருக்கலாம், ஆனால் தொடர்ந்து முறையாக முயற்சி மேற்கொள்ளப்படுகையில், ஒரு பயிற்சி பெற்ற போராளிகளின் சேனை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, விரிவாகி, அதன் முறையான பயிற்சியைப் பெற்றுவிடும்.”

(2) ஆயினும் பலர் இருபதாம் நூற்றாண்டின் மனிதகுல முன்னேற்றங்கள், குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இருந்ததைப்போல் அல்லாமல் தகவல் பரிமாற்றத்தை உடனுக்குடன் செய்துவிடுகின்றன என்று கூறுகிறார்கள். வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றுடன் இணையம், கைபேசி போன்றவை இதுநாள்வரை தகவல் பரிமாற்றங்களைச் செய்துகொண்டிருந்த பத்திரிகைகளின் பணியை வழக்கற்றுப் போய்க்கொண்டிருக்கின்ற ஒன்றாக மாற்றிக் கொண்டிருக்கின்றன என்றும் சிலர் வாதிடுகிறார்கள். எனவே, கட்சிப் பத்திரிகை தொடர்பாக லெனின் கூறிய கருத்துக்களை மீளவும் நினைவுகூர்வதில் ஏதேனும் பொருளுண்டா என்றும் அவர்கள் நம்மைப் பார்த்து கேட்கிறார்கள்.

## சீத்தாராம் யெச்சூரி

கட்சிப் பத்திரிகையின் முக்கியத்துவம் தொடர்கிறது என்பது மட்டுமல்ல, மிகவும் சரியாகச் சொல்வதென்றால் இன்றையதினம் எவ்வளவுதான் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், நம் முன் உள்ள சவால்களை எதிர்கொண்டிட அதன் முக்கியத்துவம் பல மடங்கு அதிகரித்திருக்கிறது என்பதே உண்மையாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும், ஆளும் வர்க்கங்கள் தங்கள் சமூகத்தின் மீது அவர்களுடைய தத்துவார்த்த மேலாதிக்கத்தை செலுத்திக்கொண்டே எப்போதும் தங்கள் வர்க்க ஆட்சியை கெட்டிப்படுத்திக் கொள்வார்கள். மார்க்ஸ் – ஏங்கெல்ஸ் கூறியிருப்பது போல, “ஆளும் வர்க்கத்தின் சிந்தனைகள் ஒவ்வொரு சகாப்தத்தின்போதும் ஆளுகின்ற சிந்தனைகள்தான். அதாவது, பொருளாய சக்திகளை ஆளுகின்ற வர்க்கம், அதே சமயத்தில் தன் நாட்டில் உள்ள அறிவுஜீவிகளையும் ஆண்டு

கொண்டிருக்கிறது. பொருளாய உற்பத்திச் சாதனைகளைப் பெற்றிருக்கும் வர்க்கம் தன் கட்டுப்பாட்டில் சிந்தனாவாதிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறது.”

ஆளும் வர்க்கங்களின் சிந்தனைகளின் மேலாதிக்கம்தான், கிராம்சி விளக்குவதைப்போன்று, அரசால் மட்டும் அமுல்படுத்தப்படுவதில்லை, அதன் பின்னணியில் இருந்து வலுவானதோர் அமைப்பு அதனைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆளும் வர்க்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ள கலாச்சார நிறுவனங்களின் வலைப்பின்னல் அதனைச் செய்து கொண்டிருக்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ், கலாச்சாரம் என்பது மூலதனத்தின் ஆட்சியைத் தாங்கி நிற்கிறது. கலாச்சாரத்தின் வடிவங்கள் அனைத்துமே பண்டமயமாக்கல் மூலமாக சமூகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடைகிறது. இது தொடர்பாக ஏராளமாக எழுதியிருக்கிறோம். எனவே இப்போது மீண்டும் அவற்றைத் திரும்பக் கூறவேண்டிய தேவை இல்லை. முதலாளித்துவத்தின் கலாச்சார சாதனங்கள் அனைத்தும் சமூகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய விதத்தில்தான் இருக்குமேயொழிய, சமூகத்தின் வளர்ச்சிக்கு, சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்றவிதத்தில் இருக்காது. இப்பொருள்களின் பரிவர்த்தனை மதிப்பு எப்போதுமே அதன் பயன் மதிப்பின் இடத்தைக் கைப்பற்றிவிடும்.

உலகமயத்தின் கலாச்சாரம், மக்களைத் தங்கள் வாழ்வின் எதார்த்த நிலையிலிருந்து ஒதுக்கி வைத்துவிடுகிறது. இங்கே கலாச்சாரம் என்பது அழகுணர்ச்சியை நோக்கியதாக இருக்காது, மாறாக தங்கள் வாழ்க்கையை அழுத்திக் கொண்டிருக்கிற வறுமை மற்றும் ஏழ்மை நிலையிலிருந்து தங்களை மறக்கக்கடிக்கக்கூடிய விதத்தில் தங்களின் கவனத்தைத் திருப்பக்கூடியதாக அல்லது வேறுவழியில் செலுத்தக்கூடியதாக இருந்திடும். அதன் விளைவாக, மக்கள் தங்கள் துன்பதுயரங்களுக்குக் காரணமான காரணிகளைக் கண்டறிந்து அவற்றிற்கு எதிராகப் போராடுவதற்கு அவர்களுக்கு சக்தியை அளிப்பதற்குப் பதிலாக, அவர்களிடம் இருக்கின்ற கொஞ்ச நஞ்ச சக்தியையும் வீணடிக்கக்கூடிய விதத்தில் அமைந்திருக்கும். மைக்கேல் பாரன்டி கூறியதைப்போல, “நம்முடைய கலாச்சாரத்தின் பெரும்பகுதி, தற்போது மிகவும் பொருத்தமாகவே, ஊடக முதலாளிகளின் உலகளாவிய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய விதத்தில், அவர்களின் பயன்பாட்டு மதிப்பை அதிகரிக்கக்கூடிய விதத்தில், “வெகுஜன கலாச்சாரம்” (mass culture) என்றும், “பொது மக்கள் கலாச்சாரம்” (“popular culture”), என்றும் ஏன், “ஊடகக் கலாச்சாரம்” (“media culture”) என்றும் கூட வரையறுத்திடலாம். சமூகத்தை முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்ல வேண்டும் என்பது அவர்கள் நோக்கமல்ல, மாறாக, சமூகத்தைத் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதே அவர்கள் நோக்கமாகும். இவர்களால் திணிக்கப்படும் “வெகுஜனக் கலாச்சாரம்” என்பது நம்மை எதார்த்த நிலைமைகள் குறித்து ஆழமாகச் சிந்திக்க விடாமல் மழுங்கடிக்கும் விதத்தில் உருவாக்கப்படுகின்றன. அற்பத்தனமானவைகள் குறித்த ஆடம்பரமான விளம்பரங்கள் உடனடியாக நாம் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியாதவாறு நம்மை மறக்கடித்து விடுகின்றன. குப்பை கூளங்களை எல்லாம் ஏதோ வானத்திலிருந்து வந்த வைரங்கள் போன்று நம்ப வைத்து மக்களின் கழுத்தை அறுக்கின்றன.”

ஊடகங்கள் மூலம் இவர்கள் கட்டவிழ்த்து விடும் பொழுதுபோக்குக் கலாச்சாரம், மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அரசியலற்றது என்று கூறப்படினும், அதன் தாக்கம், அதன் பிரச்சாரம் மற்றும் பெண்களை மிகவும் கீழ்த்தரமாகக் காட்டுதல், இனவெறி, நுகர்வுவெறி, எதேச்சாதிகாரவெறி, இராணுவ வெறி மற்றும் ஏகாதிபத்தியவெறி ஆகியவற்றை மக்கள் மனதில் விதைக்கக்கூடிய விதத்தில் உள்ள இவர்களது பிரச்சாரம் உண்மையில் அரசியல் சார்ந்ததேயாகும்.

உலகமயத்தின் கைகளில் உள்ள ஊடகக் கலாச்சாரம் இதனை மிகவும் ஒளிவுமறைவின்றி அப்பட்டமாகவே வெளிப்படுத்துகிறது. சமூகக் கொடுமைகளுக்கு எதிராக மக்களின் எதிர்ப்புகள் மற்றும் அவர்களின் அவலநிலைமைகளை அது கண்டுகொள்வதில்லை. உதாரணமாக, தலைநகர் டெல்லியில் ஊழலுக்கு எதிராக அண்ணா ஹசாரே குழுவினர் மிகச்சிறிய அளவில் உண்ணாவிரதம் இருந்த அதே நாளன்றுதான் நாட்டிலுள்ள அகில இந்தியத் தொழிற்சங்கங்களின் அறைகூவலுக் கிணங்க, விலைவாசி உயர்வு மற்றும் ஊழலுக்கு எதிராக, இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நாடாளுமன்றம் நோக்கி பிரம்மாண்டமான பேரணி/ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். அண்ணா ஹசாரே உண்ணாவிரதத்தைத் தூக்கிப் பிடித்த ஊடகங்கள், குறிப்பாக தொலைக்காட்சி ஊடகங்கள், தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தைக் கண்டு கொள்ளவே இல்லை. இதைவிடக் கேவலமான வேலையை ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளேடு செய்தது. “தலைநகர் டெல்லியில் தொழிலாளர்களின் பேரணி/ஆர்ப்பாட்டத்தால் போக்குவரத்து சீர்குலைந்ததாக” அது மிகவும் ‘வருத்தப்பட்டு’ ஒரு சிறிய பெட்டிச் செய்தி வெளியிட்டிருந்தது. இதே போன்று, ஜூலை மாதத்தில், மக்களின் உணவுப் பாதுகாப்பை வலியுறுத்தி, இடதுசாரிக் கட்சிகள் நடத்திய ஐந்து நாள் தர்ணா போராட்டத்தையும் அவை கண்டு கொள்ளாது இருட்டடிப்புச் செய்தன. ஆனால் அதே சமயத்தில் அதற்குப் பக்கத்திலேயே நடைபெற்ற பிசுபிசுத்துப்போன அண்ணா ஹசாரேயின் இயக்கத்தை மட்டும் அவை வானளாவப் புகழ்ந்து தள்ளின.

சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே, முதலாளித்துவம் குறித்து ஆழமான ஆய்வினை மேற்கொண்ட மார்க்ஸ், அதன் குணம் குறித்து மிகவும் சிறப்பாக வரையறுத்தார். “உற்பத்தி என்பது ஒரு தேவையைத் திருப்திப்படுத்தும் ஒரு பொருளை மட்டும் அளிக்கவில்லை. அது, அப்பொருளுக்கான தேவையையும் அளிக்கிறது. உற்பத்தி என்பது ஆரம்பத்தில் மக்களுக்காக ஒரு பொருளை உற்பத்தி செய்து அளிக்கிறது. பின்னர் அதே உற்பத்தி, உற்பத்தி செய்யபபட்ட பொருள்களை வாங்குவதற்கான மக்களையும் உற்பத்தி செய்கிறது.” (Production not only provides the material to satisfy a need, but it also provides the need for the

material. Production accordingly produces not only an object for the subject, but also a subject for the object.)

உற்பத்தியின் முதல் கட்டம் மக்களுக்கான பொருள்களை உற்பத்தி செய்வது. அதன் அடுத்த கட்டம் அவ்வாறு உற்பத்தி செய்த பொருள்களை வாங்கக்கூடிய அளவில் மக்களின் மனதை மாற்றுவது. இதற்காகத்தான் முதலாளித்துவம் விளம்பரங்களின் மூலமாக கோடிக்கணக்கான டாலர்கள் ஒவ்வோராண்டும் செலவு செய்கிறது. அதேபோன்றுதான் கலாச்சாரத் துறையிலும். விளம்பரத்தைப் பார்ப்பவர்களின் மனதை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை வாங்கக்கூடிய அளவிற்கு மாற்றி விடுவார்கள். இவ்வாறாக மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு கலாச்சாரம் இருப்பதில்லை. மாறாக, முதலாளித்துவம் விரும்பக்கூடிய விஷயங்களை மக்கள் விரும்பக்கூடிய விதத்தில் தங்கள் விளம்பரங்களின் மூலம் மாற்றிவிடுவார்கள்.

இவ்வாறு இவர்கள் நம் கலாச்சாரத்தின் மீது தொடுக்கும் தாக்குதலை நாம் சமாளித்து முறியடிப்பது எப்படி? முதல் கட்டமாக, உலகமயம் மற்றும் வகுப்புவாதம் கட்டவிழ்த்துவிட்டுள்ள கலாச்சாரப் படையெடுப்புகளினால் மதிமயங்கி மழுங்கிக் கிடக்கும் மக்களிடம் மக்கள் பிரச்சனைகளை முன்னிறுத்தி ஒரு கலாச்சார நிகழ்ச்சிநிரலை மீண்டும் உருவாக்க வேண்டியது அவசியம். அவர்களின் கலாச்சார மேலாதிக்கத்தை எதிர்கொண்டு முறியடித்திட இது மிகவும் அவசியம்.

(3) ஏகாதிபத்திய உலகமயத்தால் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிராக இன்றைய தினம் நாம் இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய 20ஆவது அகில இந்திய மாநாட்டின் தத்துவார்த்த தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

“ஏகாதிபத்தியம் மற்றும் நவீனதாராளமயம் அறிவுத்துறை மற்றும் கலாச்சாரத்துறையில் மேலாதிக்கததை நிலைநாட்டுவதற்காக இக்காலத்தில் தத்துவார்த்த யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. உலகமயத்தின் இத்தகைய நடைமுறையும், தொழில்நுட்பங்கள்

ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் போராடும் தொழிலாளர்களின் நலன்களைப் பற்றி அக்கறை கொள்வதைப் பொதுவுடைமைவாதப் பத்திரிகை முதன்மையானதாக எடுத்துக்கொள்ள வெண்டும். பத்திரிகையானது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிகச் சிறந்த கிளர்ச்சியாளனாகவும் தலையாயப் பிரச்சாரகனாகவும் விளங்க வேண்டும்.




மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளதும் செய்தி, தகவல்தொடர்பு மற்றும் பொழுதுபோக்குத் தளங்களை மிகப் பிரம்மாண்டமான முறையில் ஒன்றிணைத்து மெகா கோர்பரேட்டுகளாக வளர்த்துள்ளன. மனிதகுல அறிவுத்துறையில் இவ்வாறு ஏகபோகமான வளர்ச்சி ஏற்பட்டிருப்பதும், மெகா கோர்பரேட்டுகள் தங்களின் ஊடகங்களின் வாயிலாக செய்திகளைத் தங்களுக்குச் சாதகமான முறையில் வெளியிடக்கூடிய விதத்தில் அவற்றின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதும் இக்காலகட்டத்தில் மிகவும் முக்கிய அம்சங்களாகும். முதலாளித்துவத்திற்கு எதிராக அல்லது முதலாளித்துவத்திற்கு மாற்றை முன்வைப்பவர் களுக்கு எதிராக, தத்துவார்த்தத் தாக்குதலை இவை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய உலகமய நடைமுறை விரும்பும் கலாச்சார மேலாதிக்கம் என்பது பொதுமக்களின் ரசனையுணர்வை ஒரேமாதிரியானதாக மாற்ற விரும்புகிறது. எந்த அளவிற்கு மக்களின் பொது ரசனையுணர்வு அதிகரிக்கிறதோ அந்த அளவிற்கு ‘கலாச்சாரப் பொருள்களின்’ எந்திரரீதியான மறு உற்பத்திக்கான தொழில்நுட்பங்களை வளர்த்தெடுப்பது என்பதும் எளிதாகிறது. வர்க்க மேலாதிக்கத்தின் கண்ணோட்டத்தில், உலகமயத்தின் கலாச்சாரம் மக்களை நாள்தோறும் எதிர்கொள்ளும் தங்கள் எதார்த்த வாழ்விலிருந்து விலக்கி வைக்கவே விரும்புகிறது. இங்கே கலாச்சாரம் என்பது அழகுணர்ச்சியை நோக்கியதாக இருக்காது. மாறாக, தங்களை எப்போதும் அழுத்திக்கொண்டிருக்கும் வறுமை மற்றும் ஏழ்மை நிலையிலிருந்து, தங்களை மறக்கடிக்கக்கூடிய விதத்தில், தங்களின் கவனத்தைத் திசைதிருப்பக்கூடிய விதத்தில், இருந்திடும்.”

செய்தி, தகவல்தொடர்பு மற்றும் பொழுதுபோக்குத் தளங்களின் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் அவற்றின் மீதான கட்டுப்பாடு ஆகியவை ஏகாதிபத்தியத்தை அதிநவீன கண்காணிப்புத் தொழில்நுட்பங்களையும் வளர்த்து, செயல்படுத்திடவும் அனுமதிக்கிறது. இத்தகைய தொழில்நுட்பங்கள், ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு சவால் விடக்கூடிய வகையில் வளர்ந்திடும் வெகுஜன இயக்கங்களைக் கட்டுப்படுத்திடவும், அவற்றின்மீது செல்வாக்கு செலுத்திடவும், தேவைப்படின் அவற்றை நாசவேலை செய்த அழித்து ஒழித்திடவும் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக, மெகா நிறுவனமான ‘டைம்’, மாபெரும் மற்றொரு பொழுதுபோக்கு நிறுவனங்களில் ஜாம்பவனாகத் திகழ்ந்த வார்னர் பிரதர்ஸுடன் இணைந்தது. அதனை, அமெரிக்காவில் மிகப்பெரிய நிறுவனமாகத் திகழும் ‘ஏ.ஓ.எல்’ எனப்படும் அமெரிக்கன் ஒன்லைன் லிமிடெட் (AOL – American Online Limited) என்னும் நிறுவனத்தை 164 மில்லியன் டொலர்களுக்கு வாங்கி, உலகின் மிகப்பெரிய செய்தி, தகவல், தொடர்பு, பொழுதுபோக்கு நிறுவனமாக மாற்றியுள்ளது. ரூபர்ட் முர்டோக் தற்போது செய்தி, பொழுதுபோக்கு மற்றும் இணையதள நிறுவனங்களில் 68 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ‘வால்ட் டிஸ்னி நிறுவனம்’ தற்போது ‘ஸ்பைடர்மேன்’ புகழ் ‘மார்வெல்’ நிறுவனத்தை கபளீகரம் செய்துள்ளது. இந்நிறுவனங்கள் உற்பத்திச் செய்திடும் கலாச்சாரப் பொருள்கள் உலகம் முழுதும் எறியப்பட்டு, அதிசயத்தக்க அளவிற்கு லாபத்தை ஈட்டித்தருகின்றன.

சமீபத்தில் 2011 ஜனவரியில், ‘கம்காஸ்ட் கோர்பரேஷன் என்பிசி யுனிவர்சல்’ நிறுவனத்தை எடுத்துக்கொண்டுவிட்டது. கம்காஸ்ட் நிறுவனம்தான் அமெரிக்காவில் வீடியோ மற்றும் இணையதள நிகழ்ச்சிகளை அளிப்பதில் நம்பர் 1 நிறுவனமாகத்திகழ்கிறது. இதன்கீழ் 23 மில்லியன் வீடியோ சந்தாதாரர்களும், 17 மில்லியன் இணையதள சந்தாதாரர்களும் இருக்கின்றனர்.

இந்தியாவிலும்கூட இதேபோன்று எண்ணற்ற நிறுவனங்கள் வளர்ந்துள்ளன. அனில் திருபாய் அம்பானி குழுமத்தின் ரிலயன்ஸ் எண்டர்டெய்ன்மெண்ட் (முன்பு ரிலயன்ஸ் பிக் எண்டர்டெய்ன்மெண்ட் நிறுவனமாக இருந்தது) நிறுவனம் இந்தியாவில் மாபெரும் நிறுவனமாக உருவெடுத்துள்ளது. இதன்கீழ் இந்தியாவில் 35 மில்லியன் நுகர்வோர் உள்ளனர். ‘பிக் சினிமாஸ்’ (BIG CiNemas) இந்தியாவில் திரைப்படங்ளைத் திரையிடுவதில் பிரதானபாத்திரத்தை வகிக்கிறது. நாடு முழுதும் இதன்கீழ் 253 திரையரங்குகள் இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து திரையிடப்படும் படங்களில் இதன் பங்களிப்பு மட்டும் 10 முதல் 15 விழுக்காடுகளாகும். இந்நிறுவனம் உலகின் பல நிறுவனங்களையும் வாங்கி டிஜிடல் பிலிம் துறைகளில் கால்பதித்துள்ளது. இந்தியாவில் உள்ள பல தொலைக்காட்சி நிறுவனங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக கபளீகரம் செய்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு ஊடகத்துறையில் மெகா கோர்பரேட் நிறுவனங்கள் உருவாகி, தங்கள் நலன்களுக்கேற்ற விதத்தில் செய்திகளைத் திரித்து ஒளிபரப்புவதுடன் மட்டுமல்லாமல், பல சமயங்களில் வேண்டுமென்றே தவறான செய்திகளையும் பிரச்சாரம் செய்து, சமூகத்திற்குப் பேரழிவினை ஏற்படுத்தி வருகின்றன.

‘காசு பெற்றுக்கொண்டு செய்தி வெளியிடுவது’ என்பது ஊடகத்துறையில் வணிகமயம் எந்த அளவிற்கு விரிவடைந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது.

ஆளும் வர்க்கங்களின் மேலாதிக்கத்தின் கீழ் உண்மை மற்றும் இலட்சியம் முதலானவை விபத்துக்குள்ளாகிவிட்டன.

(4) ஆளும் வர்க்கஙகள், ஊடகங்கள் ஏகபோகம் என்கிற தத்துவார்த்த மேலாதிக்கக் கருவியால் பொதுவுடைமைத் தத்துவத்திற்கு எதிராக விதம் விதமான தத்துவங்களைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றன. பின் நவீனத்துவம் போன்ற புதிய தத்துவங்கள் மிகவும் அரக்கத்தனமானமுறையில் பரப்பப்படுகின்றன. இதன் பிரதான நோக்கம் என்னவெனில், மற்ற கம்யூனிச எதிர்ப்பு தத்துவங்களைப் போலவே இதுவும் வர்க்கங்களை மறுதலிப்பது என்பதும். அதன் கரணமாக வர்க்கப் போராட்டமே தேவையில்லை என்பதுமேயாகும். இது சமூகத்தைப் பல்வேறு கூறுகளாக – இனரீதியாக, பிராந்தியரீதியாக, மற்றும் சின்ன சின்ன அடையாளங்களாக – பிரித்து, இறுதியாக சுரண்டப்படும் வர்க்கங்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகும். எனவேதான், இத்தகைய சிந்தனைகள், சுரண்டப்படும் மக்களின் வர்க்க ஒற்றுமையை பலவீனப்படுத்துகின்றன, அதனைத் தொடர்ந்து சுரண்டும் கூட்டத்தின் வர்க்க ஆட்சியைத் தூக்கிப் பிடிக்கின்றன.

கட்சிப் பத்திரிகை, ஊடகத்தின் மற்ற வடிவங்களுடன், இவ்வாறு ஆளும் வர்க்கங்கள் நம்மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள சவால்களை எதிர்கொண்டு முறியடிப்பதற்கு ஏற்றவிதத்தில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, புரட்சிகர சக்திகள் தங்கள் சிந்தனைகளைப் பரப்பக்கூடிய விதத்தில், சுரண்டப்படும் வர்க்கங்களை அணிதிரட்டக்கூடிய விதத்தில், அவற்றின் மூலமாக அனைத்துவிதமான சுரண்டலுக்கும் முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய விதத்தில் ஒரு சமூகத்தை – சோசலிச சமூகத்தை உருவாக்கக்கூடிய போராட்டத்தை வலுப்படுத்தக் கூடிய வகையில் புரட்சிகர சக்திகளின் கைகளில் ஒரு வலுவான ஆயுதமாக, கட்சிப் பத்திரிகை திகழ வேண்டும்.

**தமிழில்: ச.வீரமணி**

# அதுவும் இதுவும் ஒன்றல்ல!

இலங்கையில் அரசியல் வேலைகளில் ஈடுபடும் கட்சிகள் எல்லாவற்றுக்கும் ஏதாவதொரு கொள்கையும் நிலைப்பாடும் உண்டு.

அதில் இடதுசாரிக் கட்சிகள் சற்று வித்தியாசமானவை. அவை தமது அரசியல் நிலைப்பாட்டை மட்டும் தெரிவிப்பதில்லை. தமது கொள்கையின் அடிஅத்திபாரமான சித்தாந்தத்தையும் தெரிவிக்கின்றன. அதுமட்டுமல்ல, அவை தமது பொது எதிரி யார்? தமது நண்பர்கள் யார்? என்பதையும், தமது மூலோபாயம் – தந்திரோபாயம் என்பனவற்றையும் கூட பகிரங்கமாகத் தெரிவிக்கின்றன.

அது மட்டுமின்றி, இடதுசாரிக் கட்சிகள் ஒழுங்காகப் பேராளர் மாநாடுகளை நடாத்தி, தமது கட்சியின்



தலைமைக் குழுக்களையும் தெரிவு செய்கின்றன. இவை எதுவும் முதலாளித்துவக் கட்சிகளில் கிடையாது.

மேலும், இடதுசாரிக் கட்சிகள் சமூகத்தில் நடைபெறும் எல்லா விடயங்கள் குறித்தும் தமது கருத்துக்களையும், விமர்சனங்களையும் வெளியிடுகின்றன. மற்றவர்களைப் பற்றிய விமர்சனங்களை மட்டுமின்றி, தம்மைப்பற்றிய சுய விமர்சனங்களையும் தயக்கமின்றி வெளியிடுபவை இடதுசாரிக் கட்சிகள் மட்டுமே. நாளாந்தம் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்காக, இடதுசாரிக் கட்சிகளே முதலில் வீதிகளில் இறங்கிப் போராடுவார்கள்.

ஒரு கட்சி அரசு செய்ய வேண்டிய விடயங்கள் குறித்து கோருவதற்கும், மற்றவர்களின் ஜனநாயகமின்மை பற்றி ஆக்ரோசமாக விமர்சிப்பதற்கும், மற்றவர்கள் மீது கல்லெறிவதற்கும் முன்பாக, தமது கட்சியின் உள்கட்சி ஜனநாயகம் பற்றி ஒருமுறை சீர்தூக்கிப் பார்த்தல் அவசியமானது.

**–மணமகன்**

# “உருவாகிறது கூரிய சிந்தனை இல்லாத தலைமுறை”

## - தத்துவவியல் பேராசிரியர் இரா.முரளி



**பேராசிரியர் இரா.முரளியை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? நிச்சயம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய நபர் அவர். அறிவுசார் கருத்துகளை சமூகத்திடம் கொண்டு செல்வது இன்றைய காலகட்டத்தில் மிகுந்த சவாலுக்குரியது. பொழுதுபோக்கு கண்ணோட்டத்திலேயே அனைத்தையும் அணுகும் இன்றைய தலைமுறைக்கு மானுட வாழ்வின் அர்த்தத்தை முன்வைக்கும் தத்துவங்களை தன்னுடைய 'யூரியூப் சனல்' (You Tube Channel) வழியாக விளக்கிக் கொண்டிருக்கிறார் பேராசிரியர் இரா.முரளி.**

**முரளி அடிப்படையில் ஒரு தத்துவப் பேராசிரியர். மதுரைக் கல்லூரியில் தத்துவவியல் துறையில் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தன்னுடைய ஓய்வுக்குப் பிறகு, 'Socrates Studio' என்ற பெயரில் 'யூடியூப் சனல்' ஐ தொடங்கி, உலகளாவிய தத்துவங்களை, தத்துவவியலாளர்களை மிக விரிவாக அறிமுகப்படுத்தி வருகிறார். சோக்ரடீஸ், பிளாட்டோ, நீட்ஷே, புத்தர், நாகார்ஜுனர், ராமலிங்க அடிகள், அம்பேத்கர், அயோத்திதாசர், ப்ரான்ஸ் ஃப்னான், திக் நியட் ஹான், ஆதிசங்கர், ரமண மகரிஷி, ஓஷோ, முகமது நபி, ஹஸ்ரத் க்வாஜா மொய்னுதீன் என வெவ்வேறு கலாசாரங்களிலிருந்து உருவாகிவந்த தத்துவவியலாளர்களைப் பற்றிய களஞ்சியமாக அவரது 'யூரியூப் சனல்' உள்ளது.**

**இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அவர் சிக்கலான தத்துவங்களை, மிக எளிய முறையில், அதேசமயம் ஆழம் குறையாமல் விளக்குகிறார். தத்துவம் குறித்து எந்த அறிமுகம் இல்லாத நபர் கூட, அவரது வீடியோக்களை மிகுந்த சுவாரஸ்யத்துடன் பார்க்க முடியும். அவருடன் உரையாடினேன். அதிலிருந்து...**

---

**தத்துவவியல் சார்ந்து 'யூரியூப் சனல்' தொடங்க வேண்டும் என்ற எண்ணம் எதனால் உங்களுக்கு வந்தது?**

“என்னுடைய 35 ஆண்டு கால ஆசிரியப் பணியில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கற்பித்திருக்கிறேன். நிறைய இலக்கியக் கூட்டங்கள், வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு தத்துவவியல் குறித்து உரையாடி இருக்கிறேன். ஆனால், என்னுள் ஒரு கேள்வி எப்போதும் ஓடிக்கொண்டிருந்தது: நான் கற்றவை வகுப்பறைக்கு மட்டும்தானா?

ஒரு பேராசிரியர் என்பவர் வகுப்பறைக்குள் மட்டும் சுருங்கிவிடக் கூடாது. அவர் தான் கற்றவற்றை மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள் தீவிரமாக எழுந்தது. வகுப்பறை தாண்டி சமூகத்துடனும் உரையாட வேண்டும் என்ற முடிவெடுத்தேன். நான் தத்துவவியல் சார்ந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் நிறைய கட்டுரைகள் எழுதி இருந்தாலும், அது குறுகிய வட்டத்துக்குள் புழங்கக் கூடியதாக இருந்தது. காட்சி ஊடகங்கள் வழியாகவே பரவலான மக்களை சென்றடைய முடியும் என்பதே தற்போதைய யதார்த்தமாக உள்ளது. இதனால்தான், 'யூரியூப் சனல்' தொடங்க முடிவு செய்தேன்.

உலக அளவில் உள்ள தத்துவங்களை, அதன் போக்குகளை தமிழ் மக்களுக்கு எளிமையான முறையில் புரியவைக்கும் வகையில் வீடியோக்களை உருவாக்க ஆரம்பித்தேன். வீடியோ தொழில்நுட்பம் சார்ந்து என் முன்னாள் மாணவர்கள் உதவியாக இருக்கிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால், யூரியூப் வழியாக தமிழ் மக்களிடம் தத்துவம் சார்ந்து பேசுவதில் நிறைவாக உணர்கிறேன். உலக அளவில் உள்ள தத்துவங்களை புரிந்துகொள்ள என்னுடைய காணொலிகள் உதவ வேண்டும் என்ற இலக்கில் செயல்பட்டுவருகிறேன்.”

**தத்துவம் என்றால் என்ன, ஒரு சமூகத்துக்கு தத்துவம் ஏன் தேவைப்படுகிறது?**

“முதலில் நாம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். தத்துவம் என்பது ஒருமையல்ல. அது பன்மை. என்னை பொறுத்தவரையில் கூர்மையான அறிவுடன் உண்மையை உள்ளபடி அறிதல்தான் தத்துவம். தத்துவம் வழியாகவே மனிதன் தனது வாழ்வுக்கான அர்த்தத்தை உருவாக்கி கொள்கிறான். ஒருவன் உலகின் தன் இருப்புக்கான அர்த்தத்தை உணரும்போது அவன் தீமை செய்வதற்கான வாய்ப்பு குறைகிறது. நன்மையின் பக்கம்தான் நாம் இருக்க வேண்டும் என்ற சிந்தனையை தத்துவம் விதைக்கிறது. அரசியலாக இருந்தாலும், அறிவியலாக இருந்தாலும் எல்லாமே தத்துவத்தின் அடிப்படையில்தான் இயங்குகின்றன. ஒட்டுமொத்தத்தில் தத்துவம் இல்லாமல் சமூகம் இயங்க முடியாது. ஆனால், சமூகம் தத்துவத்தின் அடிப்படையில்தான் இயங்குகிறது என்பது நமக்கு தெரிவதில்லை.”

**இதுவரையில் உருவான தலைசிறந்த தத்துவவியலாளர்கள் பட்டியலைப் பார்த்தால், பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். கீழை நாடுகளில் உருவான தத்துவவியலாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. என்ன காரணம்? தத்துவவியலாளர் என்றால் யார்? அதற்கான வரையறை என்ன?**

"நாம் பார்க்கும் அன்றாட உலகில் ஒவ்வொரு தனி மனிதரும் வாழ்க்கை சார்ந்து தங்களுக்கென்று ஒரு தத்துவார்த்தப் பார்வையை கொண்டிருக்க முடியும். ஆனால், அவர்களை நாம் தத்துவவியலாளர் என்று சொல்வதில்லை. மனித வாழ்க்கை, சமூக இயக்கம் சார்ந்து கோட்பாடுகளை உருவாக்குபவர்களை, வழிமுறைகளை முன்வைப்பவர்களை நாம் தத்துவவியலாளர்கள் என்று சொல்லமுடியும்.

மேற்கத்திய கல்விப்புல வரையறையின்படி, தன்னுடைய தத்துவக் கோட்பாட்டை தர்க்க ரீதியாக முன்வைக்கிறவரே தத்துவவியலாளர் என்று அழைக்கப்படுகிறார். ஆனால், இந்தியா, சீனா போன்ற கீழை நாடுகளில் அப்படி இல்லை. இந்தியாவில் தத்துவமும் ஆன்மிகமும் ஒன்றோடு ஒன்று கலந்திருந்தது. இன்னும் சொல்லப்போனால், இந்தியாவில் தத்துவம் என்பது பிரதி சார்ந்ததாக இல்லாமல் அன்றாட வாழ்க்கை சார்ந்ததாக இருந்தது. காந்தியும், தாகூரும், ரமண மகரிஷியும், ஓஷோவும் தத்துவவியலாளர்கள்தான். ராஜாராம் மோகன்ராயின் சாதி ஒழிப்பு என்பது தத்துவத்தின் செயல்வடிவம்தான், அம்பேத்கர், பெரியார் போன்றவர்கள் தத்துவவியாளர்கள்தான். உலக அளவில் பார்த்தால், கம்யூனிசம், பெண்ணியம் எல்லாம் தத்துவங்கள்தான். சூபியிசம் ஒரு தத்துவம்தான்.

மேற்கத்திய நாடுகளில் கல்வி அமைப்புக்குள் தத்துவம் கொண்டுவரப்பட்டது. அதனால், அங்கு தத்துவியலாளர்கள் குறித்து ஆய்வுகள் நடத்தப்படுகிறது. அவர்களது தத்துவம் குறித்து விவாதிக்கப்படுகிறது. இதனால், அங்குள்ள தத்துவவியலாளர்களே பரவலாக அறியப்படுகின்றனர். மேற்கத்திய தத்துவவியலாளர்கள் அளவுக்கு ஏனைய நாடுகளின் தத்துவவியலாளர்கள் பேசப்படாதற்கு அரசியல் காரணமும் உண்டு. நம்முடைய உலகம் வெள்ளையின ஆதிக்கத்தின் அடிப்படையிலே இன்னமும் இயங்குகிறது. அதனால், ஐரோப்பிய, அமெரிக்க அல்லாதவர்கள் பற்றி பேசப்படுவது குறைவாக உள்ளது. தவிர, வெள்ளையின ஆதிக்கத்தால் ஏனையவர்களும் வெள்ளையினத்தவர்கள் மூலமாகவே அங்கீகாரம் பெற வேண்டியதாக உள்ளது. அதாவது, ஏனைய நாட்டு தத்துவவியலாளர்கள் தங்கள் தத்துவக் கோட்பாட்டுக்கு அங்கீகாரம் வேண்டி, வெள்ளையர் நாடுகளுக்குதான் வரவேண்டியுள்ளது."

**தத்துவ உலகமும் ஆண்மையப்படுத்தப்பட்டதாக இருக்கிறது. ஆண் தத்துவவியலாளர்கள் முன்வைக்கப்படும் அளவுக்கு பெண் தத்துவவியலாளர்கள் ஏன் முன்வைக்கப்படுவதில்லை. தத்துவத் துறையில் பெண்கள் உருவாகவில்லையா அல்லது அவர்கள் கண்டுகொள்ளப்படவில்லையா?**

"தத்துவத் துறையில் பெண்கள் உருவாகவில்லை என்று சொல்வதைவிடவும் உருவாக வாய்ப்பளிக்கப்படவில்லை என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். 20 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரையில் கிழக்கு, மேற்கு என்று எந்த வேறுபாடும் இல்லாமல் பெண்கள் சமூக ஒடுக்குமுறையை எதிர்கொண்டனர். அவர்களுக்கு கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது. பொதுத் தளத்தில் கருத்துச் சொல்வதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது. ஆண்களே பொதுவெளியில் உரையாடக்கூடியவர்களாக இருந்தனர்.

20 ஆம் நூற்றாண்டில் சூழல் மெல்ல மாறத் தொடங்கியது. பெண்ணியக் கோட்பாடுகள் சர்வதேச அளவில் பேசப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவே பல்வேறு துறைகளில் பெண்கள் ஆளுமைகளாக உருவாக ஆரம்பித்தனர். இடதுசாரி சிந்தனைகளைப் பின்பற்றி பெண் தத்துவவியலாளர்கள் பலர் உருவாகினர். கடந்த நூற்றாண்டில் உருவாகிவந்த பெண் தத்துவவியலாளர்களில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சிமோன் தி பொவேரா முக்கியமானவர். மார்த்தா நாஸ்பம், ராயா துனேவ்ஸ்கயா, ஜூடித் பட்லர், காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவக் ஆகியவர்கள் பரவலாக அறியப்படும் பெண் தத்துவவியலாளர்கள் ஆவர். இந்தியாவில் காஞ்சனா மகாதேவனை குறிப்பிட்டுச் சொல்லலாம்."

**ஒரு தத்துவவியல் பேராசிரியராக தற்போதைய காலகட்டத்தின் போக்கை எப்படி பாக்கிறீர்கள்?**

"மிகுந்த கவலையாக இருக்கிறது. முதலாளித்துவத்தின் உச்சக்கட்ட காலத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். நுகர்வுக் கலாச்சாரம் முன்னெப்போதும் இல்லாத அளவு தற்போது தீவிரமாக பரவி வருகிறது. இது நமது இளைய தலைமுறையினரை கபளீகரம் செய்கிறது. தனிமனித பொறுப்புகளை காலி செய்கிறது. உறவுகளை சிதைக்கிறது. அறிவு மழுங்கடிக்கப்படுகிறது. இதில் ஊடகங்களுக்கு முக்கிய பங்குண்டு. அவை, தங்கள் வியாபாரத்துக்காக அறிவை மழுங்கடிக்கச் செய்யும் விஷயங்களை வழங்குகின்றன. மது மட்டும் போதை அல்ல, அறிவை மழுங்கடிக்கச் செய்யும் அனைத்தும் போதைதான். இதன் நீட்சியாக கூர்மையான சிந்தனையும், விமர்சனமும் இல்லாத ஒரு தலைமுறை உருவாகி வருகிறது.

நாம் தொழிலைக் கற்க கூடிய அறிவைதான் இந்த தலைமுறைகளுக்கு தந்து கொண்டிருக்கிறோம். சிந்தனையை வளர்த்தெடுப்பதில்லை. சிந்தனை கூர்மை இல்லாத தலைமுறை வளர, வளர சமூகத்தில் அறம் மறைந்துபோகும். அறமில்லா சமூகம் சீழ்பிடித்துவிடும். இந்தப் போக்கை தடுக்க பெரிய அறிவுசார் யுத்தம் தேவைப்படுகிறது. இதை 'மானுட விடுதலைக்கான அறிவு' என்று ஜெர்மனி தத்துவவியளாளர் ஹெபர்மாஸ் கூறுவார்."

**சமூக ஊடகங்களின் தாக்கம் உச்சமாக இருக்கும் இக்காலக்கட்டத்தில் தன்னை முன்னிலைப்படுத்தும் போக்கு தீவிரமாக உள்ளது. தன்னை முன்னிலைப்படுத்தி கொண்டால்தான் வாழ முடியும் என்ற கட்டத்துக்கு பெரும்பாலானவர்கள் நகர்ந்திருக்கிறார்கள். இந்தச் சூழல் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

"நம்மை பிறர் கவனிக்க வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் எல்லாருக்கும் உண்டு. அது இயல்பானது. ஆனால், அந்த எண்ணம் தீவிரமடையும்போது அது ஒரு நோயாக மாறிவிடும். தற்போது சமூக ஊடகங்களில் புழங்குபவர்களிடம் இந்தக் நோய்க்கூறுதான் வெளிப்படுகிறது. தங்களை முன்னிலைப்படுத்துவதன் மூலம் சமூகத்தில் முன்னகர்ந்து செல்ல முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால், அது ஒரு மாயை. அவர்களுக்கு பணம் கிடைக்கலாம். புகழ் கிடைக்கலாம். அந்தஸ்து கிடைக்கலாம். ஆனால், தன்னை முன்னிலைப்படுத்தும் போக்கு அவர்களை உள்ளீடற்ற மனிதர்களாக மாற்றும். இறுதியில் அவர்கள் வெறுமையையே அடைவார்கள்.

மௌனம் என்ற ஒன்று நம்மிடமிருந்து மறைந்து கொண்டிருக்கிறது. புத்தரின் மௌனம்தான் இதுவரை பேசப்பட்டு கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புத்தர் தன் மௌனத்தால் இந்த உலகத்தையே புரட்டிப் போட்டார்."

**இளைஞர்களிடத்தில் உங்கள் சனலுக்கான வரவேற்பு?**

"முதலில் குறைந்தபட்சம் தத்துவம் படிப்பு சார்ந்த மாணவர்களுக்கு, எளிய மக்களுக்கு நான் பேசுவது சேரும் என்று நினைத்தேன் ஆனால், ஆச்சரியம் அளிக்கும் வகையில் பல்வேறு நாடுகளில் இயங்கும் தமிழ் இளம் தலைமுறையினர் இந்த சேனல் மூலம் பயன்பெறுவதாக என்னுடன் பகிர்ந்து கொண்டனர். எல்லாம் புகழும் தத்துவத்துக்கே..!"

**உங்களுக்கு நெருக்கமான தத்துவவியலாளர் யார்?**

"ஒவ்வொரு தத்துவமும் ஒரு தனி உலகம். எனக்கு பிடித்த தத்துவவியலாளர்கள் பலர். மேற்கத்திய தத்துவியலாளர்களில் எனக்கு பிடித்தமானவர்கள் என்றால் ஹெகல், கார்ல் மார்க்ஸ், பெர்ட்ரண்ட் ரஸல் ஆகியோரைச் சொல்வேன். இந்திய அளவில் அம்பேத்கரும் தென்னிந்திய அளவில் நாராயண குருவும், ராமலிங்க அடிகளும் பிடிக்கும். இம்மூவரும் பொது சமூகத்தில் தீவிர தாக்கம் ஏற்படுத்தியவர்கள். இவர்கள் எல்லாம் எனக்கு பிடித்தமான தத்துவவியலாளர்கள். ஆனால், என் மனதுக்கு நெருக்கமான தத்துவவியலாளர் என்றால், அது ஜே.கிருஷ்ணமூர்த்திதான். அவர்தான் தத்துவரீதியாக என்னை உலுக்கியவர். அவர் வழியாகவே என் சுயத்தை நான் கண்டடைந்தேன்."

**இறுதியாக, உங்களுடைய தத்துவம் என்ன?**

"மனித நேயமும், சமத்துவமும்தான் என் தத்துவம். தத்துவத்துக்கு அகம், புறம் என இரண்டு பரிமாணங்கள் உண்டு. இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பு உடையது. புறம் சரியாக இருந்தால் அகமும் சரியாக இருக்கும். புற உலகில் எல்லாருக்கும் வளமான வாழ்கை வழங்கக்கூடிய அரசியல் சித்தாந்தம் தேவை. இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்னமும் நம் நாட்டில் ஏழைகள் குறைந்தபாடில்லை. ஏழைகளை நாம் ஏன் உருவாக்கி கொண்டிருக்கிறோம். அடிப்படையில் எல்லாருக்கும் எல்லாவும் கிடைக்கப்பெற வேண்டும்.

அக உலகில், மனிதர்கள் தங்களை ஆன்மிக ரீதியாக மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இங்கு நான் ஆன்மிகம் என்று குறிப்பிடுவது மதம் சார்ந்த ஆன்மிகத்தை அல்ல. மனிதத்தை, பிரபஞ்சத்தை உணர்வதைத்தான் ஆன்மிகம் என்று குறிப்பிடுகிறேன். அது நம்மை அன்பும், கருணையும் மிக்கவர்களாக மாற்றும்."

பேராசிரியர் முரளியுடனான உரையாடலில் இடையிடையே புத்தரை அவர் அதிகம் புகழ்கிறார். அவரது தத்துவ பேச்சுகளின் பின்னணியிலும் புத்தரின் மௌனம் ஒடிக் கொண்டிருக்கிறது.

**–இந்து குணசேகர்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

தலைமைகளின் இந்தப் போக்கு சிங்களப் பேரினவாத சக்திகள் மாகாண சபை முறைமைக்கு எதிராகச் செயல்படும் ஆர்வத்தைத் தூண்டி விட்டுள்ளது.

உலக வரலாற்றில் இனப்பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வைக் கண்டது லெனின் தலைமையில் 1917 இல் நடைபெற்ற சோவியத் சோசலிசப் புரட்சியே. அதன் அடிப்படையில்தான் உலகில் உள்ள அத்தனை சோசலிச நாடுகளிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் கூட அதுதான் சரியான வழிமுறை. ஆனால் இலங்கையில் ஒரு சோசலிச மாற்றம் உருவாகாமல் இலங்கையிலுள்ள முதலாளித்துவ சிங்கள – தமிழ் இனவாதிகளும், அவர்களது சர்வதேச எஜமானர்களும் நிலைமையைக் குழப்பிவிட்டபடியால் அதற்கான சாத்தியம் இப்போதைக்கு இல்லை என்ற சூழல் உள்ளது.

ஆனாலும், ஒரு சோசலிச அமைப்பு உருவாகும் வரை காத்திருக்காமல் முதலாளித்துவ அமைப்பிலேயே இனப்பிரச்சினை உட்பட சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்ட வரலாறுகள் உலகில் உண்டு. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ அமைப்பு முறைகளின் கீழேயே பெரும்பாலான நாடுகளில் இனப்பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படுமாயின், தேசிய இனங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படுவதுடன், அவற்றின் தொழிலாளி வர்க்கம் மத்தியிலும் ஐக்கியம் ஏற்பட வாய்ப்புண்டாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் மேம்பாடடையும். அதன் மூலம் சோசலிசத்தை நோக்கிய பயணத்துக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

அத்தகைய ஒரு நிலைமையை இலங்கையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் உருவாக்க முடியும். அதனால்தான் இடதுசாரிகளான நாம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக (காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட) நடைமுறைப்படுத்தும்படி அரசை வலியுறுத்துகிறோம். அதன் மூலம் இலங்கையைப் பீடித்துள்ள இனவாதம் என்ற பீடையை அகற்றவோ அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவோ முடியும்.

ஆனால் சிங்கள இனவாதிகளும், தமிழ் இனவாதிகளும் இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக மேற்கொள்ளப்பட்ட எல்லாத் தீர்வு முயற்சிகளையும் குழப்பியது போலவே, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதையும் குழப்ப எத்தனிக்கின்றனர். அதற்கு இடமளிக்கக்கூடாது.

இன்று இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஓரளவு சாதகமான சூழலே காணப்படுகின்றது. இனவாதிகளைத் தவிர சாதாரண சிங்கள மக்களோ, தமிழ் பேசும் மக்களோ 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை எதிர்க்கும் சூழல் இல்லை.

அதேநேரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவர் தலைமைதாங்கும் அரசும் கூட, விரும்பியோ விரும்பாமலோ 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை கொள்கையளவில் ஏற்றுள்ளனர். எனவே இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ் தலைமைகள் பயன்படுத்தி, முதலில் கிடைக்கக் கூடியவற்றை ஏற்றுக்கொண்டு, அதிலிருந்து முழுமையான தீர்வை நோக்கி முன்னேறும் தந்திரோபாயத்தையும் இராஜதந்திரத்தையும் கைக்கொள்ள வேண்டும்.

அதை விடுத்து எடுத்த எடுப்பில் தமிழர்களுக்கு சமஸ்டி வேண்டும், இணைப்பாட்சி வேண்டும், தனிநாடு வேண்டும் என்ற நடைமுறைச் சாத்தியமில்லாத வரட்டுத்தனமான கோசங்களைப் கிளப்பினால், அது தமிழ் இனவாத அரசியல்வாதிகளின் இருப்புக்கு உதவுமேயொழிய, தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு ஒருபோதும் உதவப் போவதில்லை.

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# பன்முக உலகத்தை ஏற்க மறுக்கிறார்கள்




பன்முகத்தன்மை கொண்ட உலகம் என்பதை அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவக்கூட்டணி ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது என்று ரஷ்ய வெளியுறவுத்துறை குற்றம் சாட்டியுள்ளது. லிதுவேனியா (Lithuania) இன் தலைநகர் வில்னிசியஸ் (Vilnius) இல் ஜூலை 11, 12 ஆகிய திகதிகளில் நேட்டோவின் உச்சிமாநாடு நடைபெற்றது. இது குறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது. "வில்னிசியசில் ஜூலை 11 மற்றும் 12 ஆகிய திகதிகளில் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் மாநாடு நடந்துள்ளது. மீண்டும் ஒரு முறை பனிப்போர் காலத்தின் திட்டங்களுக்கே அவர்கள் திரும்பியுள்ளார்கள் என்பதையே மாநாட்டு முடிவுகள் காட்டுகின்றன. கொள்கை ரீதியாகப் பிரிந்து நிற்கும் ஒரு பிரிவினரிடமிருந்து "100 கோடி மக்களைக்" காப்பாற்ற "ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரம்" என்று பிரித்திருக்கிறார்கள்

பன்முகத்தன்மை கொண்ட உலகம் உருவாகி வருகிறது என்பதை, அமெரிக்கா தலைமையிலான ஒட்டுமொத்த மேற்குலகம் ஏற்க மறுக்கிறது. இராணுவ நடவடிக்கைகள் உள்ளிட்டு, தங்கள் வசம் இருக்கும் அனைத்து உத்திகளையும் பயன்படுத்தித் தங்கள் மேலாதிக்கத்தைத் தக்க வைக்கப் பார்க்கிறார்கள். தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளை மறைப்பதற்காக ஐக்கிய நாடுகள் சாசனத்தைக் கேடயமாகப் பயன்படுத்துவது நம்பத்தகுந்ததாக இல்லை. நேட்டோவிற்கும், ஐ.நா.விற்கும் பொதுவான அம்சம் எதுவும் இல்லை. சர்வதேச சட்டங்களை மீறுவதற்காக இவர்களே விதிகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். நேட்டோ நடவடிக்கைகளால் என்ன நடக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததாகும். நிலையற்ற தன்மை உருவாதல், நாடுகள் அழித்தொழிப்பு, பயங்கரவாதத்தின் தோற்றம், எந்தவித தயக்கமும் இல்லாமல் போர்க்குற்றங்கள், குழந்தைகள் உள்ளிட்ட பொதுமக்கள் கொலைகள் மற்றும் அலை, அலையாய் அகதிகள் ஆகியவற்றையே நேட்டோவின் தலையீடுகள் உருவாக்குகின்றன. புதிதாக உருவாகியுள்ள சர்வதேச அரசியல் நிலவரத்திற்கும், உண்மையாக பாதுகாப்புத் தேவைகளுக்கும் தங்களைப் பொருத்திக் கொள்ள முடியாமல் நேட்டோ இருக்கிறது.

கிழக்கிலிருந்து ஆபத்து என்று புரளியைக் கிளப்பி விட்டதோடு, தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்தவும், பன்முக உலகம் வளர்வதற்கு உதவும் மையங்களைக் கட்டுப்படுத்தவும் நேட்டோ இராணுவக் கூட்டணியை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயல்கிறார்கள். வெளியில் உள்ள எதிரிகளைத் தேடும் கொள்கை அடிப்படையில்தான் ரஷ்யா குறி வைக்கப்பட்டிருக்கின்றது. உச்சிமாநாட்டு ஆவணங்களின்படி, "நேச நாடுகளின் பாதுகாப்புக்கு மிக முக்கியமான மற்றும் நேரடி ஆபத்தாக" ரஷ்யா இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மைகளைப் பற்றிக் கவலைப்படாமல், உலக எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்பை மொஸ்கோ சேதப்படுத்துவதாக நேட்டோ குற்றம் சாட்டுகிறது. உலகின் இராணுவச் செலவில் பாதிக்கும் மேல் நேட்டோ நாடுகளால் செய்யப்படுகிறது. ஆனால் அவர்கள் அதில் திருப்தியடையவில்லை.

வில்னிசியசில் நடைபெற்ற மாநாட்டில் ஒவ்வொரு நாடும் "பாதுகாப்புக்காக" அவரவர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்த பட்சம் 2 விழுக்காட்டை ஒதுக்க வேண்டும் என்று உறுதி எடுத்துள்ளனர். இதனால் அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். இனிமேல் அமெரிக்கக் கூட்டாளிகள் உக்ரைனுக்கு வழங்கிய பழைய ஆயுதங்கள் இருந்த இடத்தில் புதிய ஆயுதங்களை வாங்கி வைப்பார்கள். இந்த நிகழ்வுகளால் பெரும்பாலான நாடுகள் கவலை அடைந்துள்ளன. புதிய நியாயமான உலகை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்கு மாறாக செயற்கையாக "நாங்கள்" மற்றும் "அவர்கள்" என்று கோடு கிழிக்கும் வகையில் நேட்டோவின் கொள்கைகள், நடவடிக்கைகள் மற்றும் இராணுவ ஏற்பாடுகள் இருக்கின்றன. புதிய நியாயமான உலகத்தில் அனைத்து நாடுகளும் தங்கள் சட்டப்பூர்வமான நலன்களுக்கான முன்னேற்றப் பாதைகளையும், சமூக அமைப்புகளையும் தாங்களே உருவாக்கிக் கொள்வதே நோக்கமாகும். மற்றவர்களின் பாதுகாப்பை சேதப்படுத்திவிட்டு நமது பாதுகாப்பை உருவாக்கிக் கொள்ள முடியாது. என்னதான் வாஷிங்டன் (Washington) மற்றும் பிரஸ்ஸல்ஸ் (Brussels) ஆகியவற்றின் ஆசையாக இருந்தாலும், **இந்த உலகம் "நேட்டோ உலகம்" என்று மாறப் போவதில்லை.** இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.